janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 ஆகஸ்ட் 27 - செப்டம்பர் 02 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 21




## மோடியின் பாஜக ஆட்சியில் ஒரே ஆண்டில்

# 7.5 லட்சம் கோடி ரூபாய் மெகா ஊழல்

**மோடி அரசின் திட்டங்களில் மத்திய தணிக்கை ஆய்வுக் குழு நடத்திய ஆய்வில் ஓராண்டு மட்டும் மொத்தம் 7.5 லட்சம் கோடி அளவுக்கு ஊழல் நடந்திருப்பது அம்பலமாகியுள்ளது. ஓராண்டுக்கு இவ்வளவு என்றால் பத்தாண்டுகளுக்கு எவ்வளவு ஊழல் நடந்திருக்கும்?**

## அம்பலப்படுத்தியது சிஏஜி

### தலைமை கணக்கு தணிக்கையாளர் அறிக்கை

1. பாரத்மாலா திட்டத்தின் ஏலத்தில் மோசடி
2. துவாரகா எக்ஸ்பிரஸ்வேயில் 1 கி.மீ.சாலைக்கு ரூ.250 கோடி வீதம் செலவு
3. சுங்கச்சாவடி விதிகளை மீறி பொதுமக்களிடம் இருந்து ரூ132 கோடி கூடுதல் வசூல்
4.ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 47.5 லட்சம் பயனாளிகள் ஒரே அலைபேசி எண்ணில் உள்ளனர்!
5. அயோத்தி வளர்ச்சி திட்டத்தில் ஒப்பந்ததாரர் மூலம் கொள்ளை
6. ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஓய்வூதியத் திட்டப் பணத்தை எடுத்து விளம்பரத்திற்கு செலவிடப்பட்டுள்ளது.
7. எச்ஏஎல் நிறுவனத்தில் விமான எஞ்சின் வடிவமைப்பு குறைபாடு- ரூ 154 கோடி இழப்பு

அண்மையில் தனது சுதந்திர உரையில் பேசிய பிரதமர் மோடி ஊழல், குடும்ப அரசியல் மற்றும் சலுகை அரசியல் ஆகிய மூன்று காரணிகளே இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுக்கும் சக்திகள் எனவும் ஊழலை ஒழிக்க இன்னும் தீவிரமாக செயல்படுவேன் என்றும் முழங்கினார். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பாஜக தலைவர் நட்டா போன்றோர் மேடைக்கு மேடை இந்தியாவின் மாநில கட்சிகளையும் பிற தேசிய கட்சிகளையும் "ஊழல் கட்சிகள்" என மலிவாக எந்தவித ஆதாரமும் இன்றி விமர்சித்து வருவதை கண்டு வருகிறோம். அண்மையில் எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணி பெங்களூரில் கூடியதை ஊழல்வாதிகள் எல்லாம் பெங்களூருவில் கூடியிருக்கிறார்கள் என பிரதமர் மோடி விமர்சித்தார். ஏதோ பாஜக மட்டுமே ஊழலுக்கு அப்பாற்பட்ட புனிதக் கட்சி போல ஒரு தோற்றத்தை உருவாக்க பாஜக தலைவர்கள் தொடர்ந்து முயன்று வருகிறார்கள்.

வாஜ்பாய் காலத்தில் "இந்தியா ஒளிர்கிறது" என பொய்த் தோற்றம் காட்டிய பாஜக கும்பல், தற்போது வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ஊழல் முறைகேடுகளுக்கு எதிரான பிரதமர் என்ற முழக்கத்தில் மக்களை ஏமாற்றி திசைதிருப்பத் திட்டம் போட்டிருப்பது தெளிவாகிறது. தனது இந்த பொய் பரப்புரை கருத்துக் திணிப்புக்கு ஆதரவாக அமலாக்கத்துறையையும் வருமானவரித் துறையையும் எதிர்க்கட்சிகள் மீது ஏவுகிற பாஜக, அமலாக்கத்துறை நடவடிக்கை மூலமாக எதிர்க்கட்சிகள் மீது ஊழல் முத்திரை குத்த முயற்சிக்கிறது.

தமிழ்நாட்டில் திமுக மீதும், தில்லியில் ஆம்ஆத்மி கட்சியின் மீதும் ஜார்க்கண்ட்டில் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் மீதும், தெலுங்கானாவில் முதல்வர் சந்திரசேகர் ராவ் மகளான கவிதா மீதும், காங்கிரஸ் கட்சி மீதும் இன்னும் பிற கட்சிகள், முக்கியத் தலைவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், முக்கிய அமைச்சர்கள்



ஆகியோரை குறிவைத்து பலவீனப்படுத்தி பேரம் பேசும் நிலைக்கு தள்ளவைப்பதே பாஜகவின் தேசிய செயல் திட்டமாக உள்ளது.

தேர்தல் அரசியல் ஆதாயத்திற்காக அமலாக்கத்துறையையும் வருமானவரித் துறையையும் பாஜக தவறாக பயன்படுத்துவதை இடதுசாரித் தலைவர்கள் முதல் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வரை கடுமையாக கண்டனம் தெரிவித்து வருகின்றனர். பாஜகவின் கடந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் உருப்படியாக எந்த மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்தாமல், அதானிக்கும் அம்பானிக்கும் ஆதரவாக நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்துவிட்டு, வெறுப்புப் பரப்புரை மூலமாக மணிப்பூர், ஹரியானாவை எரிய விட்டு, இந்தியாவை வாழும் நரகமாக மாற்றி வருகிற பாஜக, தற்போது அவற்றையெல்லாம் மறைக்கிற வகையிலே "ஊழலுக்கு எதிரான மோடியின் போராட்டம்" என்ற பரப்புரையை தீவிரமாக முன்னெடுத்து வந்தது. இந்த நிலையில்தான் மோடி அரசின் திட்டங்களில் நடைபெற்றுள்ள மெகா ஊழல் முறைகேடுகளை மத்திய கணக்கு தணிக்கை ஆணையத்தின்(சி.ஏ.ஜி) அறிக்கை அம்பலப்படுத்தி பாஜகவிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

சி.ஏ.ஜி (Comptroller and Auditor General of India - CAG) என்கிற தன்னாட்சி அமைப்பானது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களில் வரவு செலவு அறிக்கைகளை ஆய்வு செய்து அறிக்கையாக வெளியிடுகிற தன்னாட்சி அமைப்பாகும்.

பாஜக ஆட்சியில் தேசிய நெடுஞ்சாலைத் துறை, விமானத்துறை, ரயில்வே துறைகளில் பாரத் மாலா, உதான், ஆயுஷ்மான் பாரத் போன்ற ஏழு திட்டங்களின் வரவு செலவு விவரங்களை ஆய்வு செய்த மத்திய கணக்கு தணிக்கை ஆணையமானது, திட்டங்களில் முறைகேடாக பணத்தை பயன்படுத்தியது, முறையாகத் திட்டங்களில் பணத்தை செலவு செய்யாதது போன்ற முறைகேடுகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் சுமார் ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளதாகவும் பிரதமர் இது குறித்து வாய் திறந்த பேச வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகிறது.

### துவாரகா நெடுஞ்சாலை ஊழல்

கடந்த 201718 நிதியாண்டில் தில்லியில் இருந்து ஹரியானாவை இணைக்கிற 29 கிலோ மீட்டர் தொலைவிலான துவாரகா விரைவு நெடுஞ்சாலை அமைக்கிற பணி தொடங்கப்பட்டது. நாட்டின் முதல் எட்டு வழி விரைவு சாலையான துவாரகா நெடுஞ்சாலை திட்டமானது, சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டது. இந்த திட்டத்தை ஆய்வு செய்த சி.ஏ.ஜி ஒரு கிலோ மீட்டர் திட்டச் செலவுக்கான மதிப்பீடை 18 கோடி ரூபாயில் இருந்து 250 கோடி ரூபாயாக பல மடங்கு அதிகரித்ததை சுட்டிக்காட்டுகிறது. இந்த கொள்ளையை மேற்கோள்காட்டி பேசிய ஆம்கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், இந்தியாவில் கடந்த 75 வருட ஆட்சியில் இல்லாத ஊழல் என விமர்சித்துள்ளார். இது குறித்துப் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சஞ்சய் சிங், துவாரகா விரைவுச் சாலையில் மட்டுமே இவ்வளவு ஊழல் செய்தவர்கள், பாரத்

தொடர்ச்சி 8ம் பக்கம்

## பாசிச பா.ஜ.கவே ஆட்சியை விட்டு வெளியேறு!

## ஆக. 30ல் ஏஐஒய்எப் - ஏஐஎஸ்எப் இந்திய ஒற்றுமை பேரணி

கட்சிக் கடிதம்

# எடப்பாடி பழனிச்சாமி அதிமுகவின் நோக்கம் என்ன?



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுகவின் மாநாடு மதுரையில் நடைபெற்று முடிந்துள்ளது. பதினைந்து லட்சம் பேர் கலந்து கொண்டனர் என்றும் அனைவருக்கும் தங்கு தடையின்றி உணவு வழங்கப்பட்டது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

மதுரை மாவட்டத்தில் தினசரி 4.90 கோடி ரூபாய் அளவிற்கு விற்கப்படும் மதுபானம் 16 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு சாதனை படைத்ததுடன், அருகில் உள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் 18 கோடி ரூபாய்க்கும், சிவகங்கை மாவட்டத்தில் 12 கோடி ரூபாய்க்கும், என 46 கோடி ரூபாய்க்கு மது விற்பனை ஆகியுள்ளது சாதனைதான்.

எடப்பாடி பழனிச்சாமி மக்கள் வெள்ளத்தில் நீந்தி வந்தார் என்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. நீந்தி வருவதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். நீந்திச் சென்று தான் முதலமைச்சர் நாற்காலியை கைப்பற்றினார் என்பதனை அனைவரும் அறிவர் இத்தகைய நீச்சல் போட்டிகளில் அவரை வெல்ல அதிமுகவில் எவரும் இல்லை.

ஒரே நாள் மாநாட்டில் 32 தீர்மானங்களை நிறைவேற்றி சாதனை படைத்துள்ளார்.

51 அடி உயர கம்பத்தில் கொடியேற்றினார். குட்டி விமானம் (ஹெலிகாப்டர்) மலர் மாரி பொழிந்தது இவை எல்லாம் இம்மாநாட்டின் சாதனைப் பட்டியலாக வெளி யிடப்படுகின்றது.

இம்மாநாட்டின் நோக்கம் என்ன? இம்மாநாட்டால் நாட்டு மக்கள் அல்லது குறைந்தபட்சம் தமிழக மக்கள் அடையப் போகும் பலன் என்ன?

முழுக்க, முழுக்க வெறும் திமுக எதிர்ப்பு நிலை என்பது ஒன்று மட்டும்தான் மாநாட்டின் நோக்கமா?

தமிழ்நாட்டு மக்கள் நலன் சார்ந்த நோக்கம் எதுவும் இல்லாத மாநாடா, இம்மாநாடு!

இம்மாநாட்டில் எடப்பாடி பழனிச்சாமியை பாராட்டி, போற்றி, புகழ்ந்து அவருக்கு 'புரட்சித்தமிழர்' எனும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இனி எடப்பாடி பழனிச்சாமியை ஆதரிக்கும் கட்சித் தொண்டர்கள், இதுவரை ஈ. பி. எஸ். என அழைத்து வந்ததை கைவிட்டு புரட்சித் தமிழர் என்று அழைப்பார்கள். இனி விளம்பரங்களில் புரட்சித் தமிழர் என்று விளம்பரம் செய்யப்படுவார்!

புரட்சித் தலைவர்

புரட்சித்தலைவி

வரிசையில் தற்போது புரட்சித் தமிழர் இடம் பிடித்துள்ளார்.

எம்ஜிஆர், ஜெயலலிதாவிற்கு இணையான தலைவர் எடப்பாடி பழனிச்சாமி என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தகைய புரட்சி தமிழர் பட்டத்தை ஈ.பி.எஸ்.சும் மகிழ்ச்சியோடு ஏற்று மகிழ்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புரட்சித் தமிழராக போற்றப்பட விரும்புகின்ற எடப்பாடி பழனிச்சாமியிடம் சில கேள்விகள்?

புரட்சித்தலைவராக போற்றப்பட்ட எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது அன்றைய ஒன்றிய அரசு, தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து வழங்கி வந்த அரிசியின் அளவை குறைத்தது.

ஒன்றிய அரசின் நயவஞ்சக செயலைக் கண்டித்து சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சமாதி முன்பு உண்ணா நோன்பு இருந்தார்.

இன்றைய ஒன்றிய அரசு மாநிலத்திற்கு வழங்கி வந்த அரிசியின் அளவை குறைக்கவில்லை. மாறாக முற்றிலுமாக நிறுத்திவிட்டது தமிழ்நாட்டிற்கு தேவையான அரிசியை வெளி மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்கிட வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய அநீதியை கண்டித்து புரட்சித்தமிழர் என்ன செய்யப் போகிறார்?

காவிரி நதிநீர் பிரச்சினையில் ஒன்றிய அரசு நேர்மையாக நடந்து கொள்ளவில்லை எனக் கூறி, புரட்சித் தலைவியாக போற்றப்பட்ட ஜெயலலிதா கடற்கரையில் உண்ணா நோன்பு போராட்டம் மேற்கொண்டார். அன்றைய ஒன்றிய அமைச்சர் சென்னைக்கு பறந்து வந்து ஜெயலலிதாவிடம் உறுதி தந்தார்.

தொடர்ச்சி 6ம் பக்கம்



# 2023, செப்டம்பர் 12, 13, 14

# ஒன்றிய அரசின் மக்கள் விரோத, மாநில விரோத கொள்கை எதிர்ப்பு

# தமிழ்நாடு முழுவதும் தொடர் மறியல் போராட்டம்

பாஜக ஒன்றிய அரசின் தவறான, மக்கள் விரோதக் கொள்கைகளால் உணவுப் பொருட்கள் உள்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் கடுமையாக உயர்த்துள்ளன. வரிகளும், சேவைக் கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் 13 கோடியே 50 லட்சம் பேர் வறுமை நிலையில் இருந்து வெளியேறி, வசதி படைத்தோர் பட்டியலுக்கு மாறி விட்டதாக மோடி அரசு தம்பட்டம் அடித்து வருகிறது. இது முற்றிலும் தவறான தகவலாகும்.

மக்கள் தேர்ந்தெடுத்து அமைக்கும் மாநில அரசுகளின் உரிமைகளை நாட்டின் உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ள நிலையில், அதனை மறுத்து, நிராகரித்து, உரிமைகளை பறிக்கும் வகையில் ஆளுநர்கள் மூலமாக அதிகாரம் செலுத்தும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்குக் கோரும் சட்ட திருத்த மசோதாவை, குடியரசு தலைவரின் ஒப்பதலுக்கு அனுப்பி விட்ட நிலையில், ஆளுநர் பெற்றோர்கள் கூட்டம் நடத்தி “நீட் விதிவிலக்கு” கோரிக்கை எப்போதும் ஏற்க முடியாது. கையெழுத்து போட



மாட்டேன் என கூறி ஆத்திரமூட்டியுள்ளார். இதனால் ஒரு மாணவர் குடும்பம் தற்கொலைச் சாவுக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டிக்கும் முறையில் வரும் செப்டம்பர் 12, 13, 14 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு தொடர் மறியல் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

| வ. எண். | மாவட்டம் | தலைமை ஏற்போர் தோழர்கள் |
|---|---|---|
| 1. | வட சென்னை | 12.09.2023<br>இரா.முத்தரசன், மு.வீரபாண்டியன்,<br>த.கு.வெங்கடேஷ் |
| 2. | மத்திய சென்னை | 13.09.2023<br>க.சந்தானம், பா.கருணாநிதி |
| 3. | தென் சென்னை | 14.09.2023<br>நா.பெரியசாமி முன்.எம்.எல்.ஏ.<br>எஸ்.கே.சிவா |
| 4 | கடலூர் | டி.எம்.மூர்த்தி, பி.துரை, டி.மணிவாசம் |
| 5 | திருச்சி புறநகர் | பி.பத்மாவதி, முன்.எம்.எல்.ஏ.<br>எஸ்.ராஜ்குமார், த.இந்திரஜித் |
| 6. | திருச்சி மாநகர் | எம்.செல்வராஜ், எஸ்.சிவா<br>கே.சுரேஷ் மாமன்ற உறுப்பினர் |
| 7. | தஞ்சாவூர் வடக்கு | வை.சிவபுண்ணியம் முன்.எம்.எல்.ஏ.<br>மு.அ.பாரதி |
| 8. | திருப்பூர் மாநகர் | எம்.ரவி, எஸ்.ரவிச்சந்திரன் |
| 9. | விருதுநகர் | தி.ராமசாமி முன்.எம்.எல்.ஏ.<br>பொ.லிங்கம் முன்.எம்.பி.<br>வி.அழகர்சாமி முன்.எம்.பி.<br>வி.பொன்னுபாண்டியன் முன்.எம்.எல்.ஏ. |
| 10. | திருப்பூர் புறநகர் | கே.சுப்பராயன் எம்.பி., கே.எம்.இசாக் |
| 11. | நாகப்பட்டினம் | எம்.செல்வராசு எம்.பி.<br>சிவகுரு பாண்டியன் |
| 12. | தளி (கிருஷ்ணகிரி) | தி.ராமசந்திரன் எம்.எல்.ஏ.<br>எம்.இலகுமைய்யா |
| 13. | திருத்துறைப்பூண்டி | க.மாரிமுத்து எம்.எல்.ஏ.<br>கே.உலகநாதன் முன்.எம்.எல்.ஏ.<br>அ.பாஸ்கர் |
| 14. | திருவாரூர் | கோ.பழனிசாமி முன்.எம்.எல்.ஏ. |
| 15. | திருவண்ணாமலை | பி.எஸ்.மாசிலாமணி, இரா.தங்கராசு |
| 16. | திருவள்ளூர் | ம.ராதாகிருஷ்ணன்<br>ஏ.எஸ்.கண்ணன் முன்.எம்.எல்.ஏ.<br>கே.கஜேந்திரன் |
| 17. | மன்னார்குடி | வை.செல்வராஜ் |
| 18. | கோவை | எம்.ஆறுமுகம் முன்.எம்.எல்.ஏ.<br>சி.சிவசாமி |
| 19. | ஈரோடு வடக்கு | எஸ்.மோகன்குமார்<br>பி.எல்.சுந்தரம் முன்.எம்.எல்.ஏ. |

| வ. எண். | மாவட்டம் | தலைமை ஏற்போர் தோழர்கள் |
|---|---|---|
| 20. | சேலம் | ஆ.மோகன் |
| 21. | தருமபுரி | ந.நஞ்சப்பன் முன்.எம்.எல்.ஏ.<br>எஸ்.கலைச்செல்வன், எஸ்.தேவராசன் |
| 22. | தஞ்சாவூர் தெற்கு | முத்து உத்திராபதி |
| 23. | புதுக்கோட்டை | த.செங்கோடன் |
| 24. | செங்கல்பட்டு | ஜி.ஆர்.ரவீந்திரநாத், எ.ராஜ்குமார் |
| 25. | தென்காசி | த.இசக்கிதுரை |
| 26. | திருநெல்வேலி | எஸ்.காசிவிஸ்வாநாதன், செ.லட்சுமணன்<br>எஸ்.வி.கிருஷ்ணன் முன்.எம்.எல்.ஏ.<br>ஆர்.சடையப்பன் |
| 27. | கன்னியாகுமரி | க.பாரதி, த.சுபாஷ்சந்திரபோஸ் |
| 28. | சிவகங்கை | மு.கண்ணகி,<br>எஸ்.குணசேகரன் முன்.எம்.எல்.ஏ.<br>கே.தங்கமணி, கே.கோபால் |
| 29. | மதுரை மாநகர் | சீ.தினேஷ், எம்.எஸ்.முருகன் |
| 30. | மதுரை புறநகர் | பி.முத்துவேல், பா.காளிதாஸ் |
| 31. | நாமக்கல் | பா.தினேஷ், கே.அன்புமணி |
| 32. | பெரம்பலூர் | வீ.ஞானசேகரன், வி.ஜெயராமன் |
| 33. | கரூர் | கே.என்.நாட்ராயன், எம்.ரத்தினம் |
| 34. | ஈரோடு தெற்கு | எஸ்.டி.பிரபாகரன் |
| 35. | அரியலூர் | சொ.இராமநாதன் |
| 36. | இராமநாதபுரம் | என்.எஸ்.பெருமாள் |
| 37. | காஞ்சிபுரம் | பா.கார்த்திக் |
| 38. | மயிலாடுதுறை | அ.சீனிவாசன் |
| 39. | திண்டுக்கல் | ஏ.பி.மணிகண்டன் |
| 40. | கள்ளக்குறிச்சி | கே.ராமசாமி |
| 41. | திருப்பத்தூர் | எம்.சுந்தரேசன், ஏ.சி.சாமிகண்ணு |
| 42. | தேனி | கே.பெருமாள் |
| 43. | தூத்துக்குடி | பி.கரும்பன் |
| 44. | நீலகிரி | பி.போஜராஜன் |
| 45 | விழுப்புரம் | ஆ.சௌரிராஜன் |
| 46 | வேலூர் | ஜி.லதா முன்.எம்.எல்.ஏ.<br>கு.லிங்கமுத்து முன்.எம்.எல்.ஏ. |

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 21

## கணக்குத் தீர்ப்போம்!

ஊழலற்ற ஆட்சி என்று நொடிக்கு ஒரு தடவை மோடி உள்ளிட்ட பாஜகவினர் மார்தட்டிக் கொள்வார்கள். செய்த ஊழலை பட்டியலிட்டால், எதிர்க்கட்சிகளின் அவதூறு என்பார்கள்.

ஆனால் இந்திய அரசின் தலைமைக் கணக்கு தணிக்கையாளரே, கடந்த ஐந்தாண்டு காலத்தில் பாஜக நிகழ்த்திய ஊழல்களை விலாவாரியாகப் பட்டியலிட்டுள்ளார்.

இந்தியாவின் முக்கிய நகரங்களை எல்லாம் இணைக்கும் 34,800 கி.மீ. சாலைக்கு பாரத்மாலா திட்டம் என்று பெயர் வைத்தனர். ஒரு கிலோமீட்டர் நீளச்சாலைக்கு ரூ.15.37 கோடி செலவு என அமைச்சரவை ஒப்புதல். ஆனால் பின்னர் 250 கோடி ரூபாய் என 14 மடங்கு அதிகரிக்கப்பட்டது.

விண்ணில் பாய்ந்து நிலவின் மீது ஊர்தியை இறக்கும் சந்திரயான்3 திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.615 கோடியாம்! ஆனால் 3 கி.மீ. சாலை போடுவதற்கு அதைவிட அதிகமாக ரூ.750 கோடி செலவழித்துள்ளார்கள் இந்த வித்தகர்கள்.

ஐந்து சுங்கச்சாவடிகளில் சோதனை செய்த சிஏஜி, 132 கோடி அதிக வசூல் என கணக்கிட்டுள்ளார்கள். நெடுஞ் சாலையில் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கும் போது சுங்க கட்டணத்தில் 75% மட்டுமே வசூலிக்க வேண்டுமாம். அப்படியெல்லாம் குறைப்பது வழக்கமே இல்லை. தமிழ்நாட்டில் பரனூர் சாவடியில் மட்டும் இந்த வகையில் ரூ.28 கோடி அதிக வசூல்!

சாதாரண மக்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் அதற்கான காப்பீடு வழங்குவதற்கு ஆயுஷ்மான் திட்டம் ஆரம்பித்தார்கள். எப்போதோ இறந்துவிட்டவர்களின் பெயர்களில் இப்போது 2,14,923 காப்பீடுகளில் கோடிக் கணக்கில் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதை வழங்குவது பொருளாதார விடயங்களுக்கான அமைச்சரவை குழு. அதன் தலைவர் மோடியே தான்!

ஏழு வகைகளில் 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் என்று சிஏஜி ரிப்போர்ட் விபரமாய் ஏழு அறிக்கைகளில் பிட்டுப் பிட்டு வைத்திருக்கிறது.

உலக அளவில் இந்திய மக்களின் வாழ்வாதாரங்கள் எவ்வளவு தாழ்ந்து வருகின்றன என்பதற்கு பல ஆய்வறிக்கைகள், பட்டியல்கள் வந்துவிட்டன. அவற்றையெல்லாம் பொய் தகவல்கள் என்று மோடி கூட்டம் அழுகுணி ஆட்டம் ஆடும். இப்பொழுது இந்தியா தலைமை கணக்குத் தணிக்கையாளருக்கே சரியாக கணக்கு போட தெரியவில்லை என்று கூறுகிறார்கள்.

ஏழரை லட்சம் கோடி மட்டுமல்ல, பாஜக போட்டது இன்னும் அபாரமான கணக்கு!

வங்கிகளில் கார்ப்பரேட் பெருமுதலாளிகள் வாங்கிய கடனைக் கட்டாததால் தள்ளுபடி செய்த தொகையைக் கேட்டால் தலை சுற்றும்.

கடந்த 10 ஆண்டுகளில் பணக்காரர்களின் கடன் 15 லட்சத்து 31,453 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் வங்கிகளில் குறைந்தபட்ச தொகையை கூட வைத்திருக்க முடியாத ஏழைகளுக்கு அபராதமாக 21,000 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் இன்னும் கொடுமை, கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த அபராத தொகைக்கு ஜிஎஸ்டி வரியும் சேர்த்துப் போட்டு வசூலிக்கிறார்கள்.

இன்னும் மோசமானது என்னவென்றால், கடந்த எட்டு ஆண்டுகளில் மோடி அரசு 100 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி இருக்கிறது. கடந்த 65 ஆண்டுகளில் இந்தியா வாங்கிய கடன் இதில் சரி பாதி கூட இல்லை.

ஆனால் இதே 9 ஆண்டுகளில் பிஜேபியின் சொத்து மதிப்பு 6500 கோடியாக உயர்ந்திருக்கிறது.

பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பும், வருமானமும் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்களை கிட்டத்தட்ட இலவசமாய் கார்ப்பரேட்டுகளிடம் தூக்கிக் கொடுத்தது; நன்கொடை அளித்தவரின் பெயர் தெரியாமலே பணம் வழங்க தேர்தல் பத்திரங்கள் கொண்டு வந்தது ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் வருமானத்தின் வழி தெரியும்.

இந்த லட்சணத்தில் அச்சிட்ட 88,000 கோடி ரூபாய் நோட்டுகளை காணவில்லை என்று வேறு, இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது.

மோடி, அமித்ஷா ஆகியோரை விமர்சித்த போது பேசாமல் இருந்த பிஜேபி எம்பிக்கள், அம்பானியை விமர்சித்தவுடன் நாடாளுமன்றத்தில் ஆவேசமாய் பொங்கினர் என்று சொன்னார் காங்கிரஸ் எம்.பி, கௌரவ் கோகாய்.

ராகுல் காந்திக்கு கூட அதானியைப் பற்றிப் பேசியவுடன் தானே எம்.பி. பதவி பறிபோனது.

வாய் திறப்பது தான் மோடி; நாக்குக்கு கார்ப்பரேட்டுகள் உத்தரவு போடுகிறார்கள்.

எல்லா சுமைகளையும் சாதாரண மக்களின் தலையில் மீது சுமத்தும் கார்ப்பரேட் ஆதரவு மோடியின் கணக்கை 2024ல் பொதுமக்கள் பார்ப்பார்கள்; அந்தப் பொய்க் கணக்கை முடிப்பார்கள்.

# மோடியின் ஆட்சி அவலங்களை அம்பலப்படுத்தும் நிர்மலா சீதாராமனின் கணவர்



பேரா.மு.நாகநாதன்


**மோடியின் 9 ஆண்டு ஆட்சியில் சீனாவை மிஞ்சி 143 கோடி மக்கள் தொகையோடு உலக நாடுகள் வரிசைப் பட்டியலில் இந்தியா முதலாம் இடத்திற்கு வந்துள்ளது.**

இதுவும் மோடியின் சாதனை என்று கூட சங்கப் பரிவார கும்பல் கூறக்கூடும்.

மணிப்பூர் கலவரங்களைக் கற்பழிப்புகளை, பட்டப்பகல் கொலைகளை, இரண்டு மாதங்கள் புரையோடச் செய்து, இந்த அடாத செயலை மூடி மறைக்க அனைத்து ஜனநாயக விரோத செயல்களையும் ஒன்றிய அரசும், மணிப்பூர் பாஜக அரசும் இணைந்து செய்துள்ளன.

இந்த உண்மைகளை ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துக்கூறத் தயங்குகின்றன. அஞ்சுகின்றன.

மது, கஞ்சா மயக்கங்களை விட மோடி மயக்கம் அல்லது அச்சம் தான் இந்த ஊடக உரிமையாளர்களைத் தள்ளாட வைக்கிறது என்ற ஐயம் ஏற்படுகிறதல்லவா!





ஒரு சில ஊடகங்கள் விதிவிலக்காக மூன்றாம், நான்காம் பக்கங்களில் வாசகர்கள் நம்பிக்கையை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தில் எதிர்க்கட்சிகளின் செய்திகளை வெளியிடுகின்றன.

ஆனால் ஒருவர் மட்டும் அச்சமின்றி இந்தியா வழித்தவறி அபாயம் நிறைந்த பாதையில் செல்கிறது என்பதைச் "சிவப்பு கொடியைக்" காட்டி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் யார்?

ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனின் கணவர் பாரகலா பிரபாகர்.




பிரபாகர் எழுதிய "வளைந்த மரமான புதிய இந்தியா" (The Crooked Timber OF New India- Parakala Prabhakar -2023)-என்ற நூல் இன்று உலகம் முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறது.

நெறியற்ற பாதையில் மானுடம் நேர் பயணம் செய்ய முடியாது என்று 18 ஆம் நூற்றாண்டில் மெய்யியல் அறிஞர் கான்ட் குறிப்பிட்டார்.

அவருக்கு முன்பே பல மெய்யியல் அறிஞர்கள் இக்கருத்தை எதிரொலிக்கும் வகையில் பதிவு செய்துள்ளனர்.

அறிஞர் கான்டின் வளைந்த மரம் என்ற புகழ் பெற்ற சொல்லாடல் இந்நூலின் தலைப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திரு.சுப்பிரமணிய சாமி போன்று மோடி ஆட்சியைக் குண்டர் ஆட்சி என்று கூறாமல் நயத்தக்க நாகரிகத்தோடு திருவாளர் பிரபாகர் வளைந்த மரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

வளைந்த செங்கோல் என்றும் இந்தக் கருத்தியலைத் தமிழ் மரபுப்படி குறிப்பிடலாம்.

மோடி அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் போது, 30 ஆண்டுகள் முன்பு தமிழ்நாட்டின் சட்டமன்ற கதைகளைக் கதைக்கின்ற நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தனது கணவர் பிரபாகர் நூலின் அறிமுகப் பகுதியில் குறிப்பிட்ட சில கருத்துகளுக்குப் பதில் சொல்லுவாரா?

நிர்மலாவின் கணவர் என்ன தான் சொல்கிறார்?

1. நாட்டின் பொருளாதாரத் துயரங்கள் மோடி ஆட்சியின் தள்ளாடுகிற, செயலற்ற தன்மையால் ஏற்படுகின்றன.

   அண்மையில் வெளியான மீளாப் பழியைச் சுமத்துகின்ற ஹின்டன்பர்க் அறிக்கை அதானியின் பெரும் வளர்ச்சியைப் பற்றிக் கடுமையான கேள்விகளை எழுப்பி, அதானிமோடி ஆட்சியோடு உள்ள நெருங்கிய தொடர்பை அம்பலப்படுத்தியது.

   இன்றளவும் இதற்கான ஒன்றிய அரசின் பதில் என்னவென்று நாடே காத்துக் கொண்டிருக்கிறது.

2. குறிப்பாக அமலாக்கத்துறை இயக்குநரகம் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தவும் அவர்கள் இயங்காமல் தடுப்பதற்கும் ஒருகருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.
3. ஜனநாயக உரிமைகளைக் கடுமையாக அடக்கும் முயற்சிகளில் நிருவாகம் ஈடுபடும் நிலையில், உச்ச நீதிமன்றம் உட்பட நீதிமன்றங்களும் இணைந்து செயல்படுகிற நிலையைக் காண முடிகிறது.
4. இராணுவத்திற்குப் பயன்படுத்த வேண்டிய பெகாஸஸ் உளவு கருவியை எதிர்க்கட்சித் தலைவர்கள், ஊடகயிலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களை உளவு பார்ப்பதற்குப் பயன்படுத்தியதற்காக மோடி அமீத் ஷா நிருவாகத்தை உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டது.

   நீதிமன்றத்திற்கோ, நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட வல்லுநர் குழுவிற்கு முறையாக விளக்கமோ அல்லது உறுதியாகப் பதிலையோ அளிக்கவில்லை.

5. நாடு முழுவதும் குறிப்பாக வட இந்தியாவில் மாட்டிறைச்சியைத் தங்களின் வீடுகளில் சேமித்து வைத்து இருந்தார்கள் அல்லது பசுக்களை உண்பதற்குக் கடத்திச் சென்றார்கள் என்ற ஐயத்தின் பேரில் இஸ்லாமியர்களை வெட்டி வீழ்த்தினர்.

   தெருவில் கடை வைத்து இருப்பவர்கள், வளையல் கடைக்காரர்கள், சிறிய கடைக்காரர்களைத் தொடர்ந்து தாக்கினர்.

   இது போன்ற எண்ணற்ற மோடி ஆட்சியின் சீர்கேடுகளை பிரபாகர் பட்டியலிட்டுள்ளார்.

தனது அறிமுகக் கருத்துரையில் இறுதியாக

- நமது ஜனநாயகம் சிக்கலில் உள்ளது
- நமது சமூக அமைப்பு கிழித்தெறியப்படுகிறது
- நமது பொருளாதாரம் ஆபத்தில் உள்ளது.
- நாம் இருண்ட காலத்திற்குப் பின்நோக்கி இழுத்துச் செல்லப்படுகிறோம்.

இதை வலியுறுத்தி மீண்டும் மீண்டும் சொல்லி எச்சரிக்கை மணியைஒலிக்கவேண்டியது ஒவ்வொரு குடிமகனின் தலையாயக் கடமையாகும்.

செய்தி ஏடுகளின் கட்டுரைகள் வழியாகவும், உரைகள் வாயிலாகவும், இந்நூல் வழியாகவும் இதைச் செய்து வருகிறேன்

நான் குடிமகன் என்ற முறையில் எனது கடமையை ஆற்றுகிறேன்.

எனவே ஜனநாயக விரோத, மக்கள் விரோத, நாட்டு விரோத, மானுட விரோத, முதலாளித்துவ பாசிச பாஜக ஆட்சியை அகற்ற விடுதலை நாளில் சூளுரைப்போம்.

# தொலைந்துபோன பரிவுணர்வு



டி. ராஜா

## அதிகாரத்தில் இருப்பவர்களின் இரக்கமின்மையைக் காட்டும் மணிப்பூரும் ஹரியானாவும்

**ஆகஸ்ட் 15, 1947 அன்று நாம் வென்ற சுதந்திரம், கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் காலனித்துவ நுகத்தடியிலிருந்து விடுதலைப் போராட்டத்தின் விளைவாகும்.**

பிரிட்டிஷ் பிடியில் இருந்து நம் நாட்டை விடுவிப்பதற்காக ஆயிரக்கணக்கானோர் தியாகம் செய்தனர்.

இந்திய சுதந்திரத்தின் கடைசிப் போரான இந்திய கடற்படை எழுச்சியில் கம்யூனிஸ்டுகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர்.

அது, இந்தியாவிலிருந்து வெளியேறுவதை தவிர வேறு வழியில்லை என்ற நிலையை ஆங்கிலேயர்களுக்கு ஏற்படுத்தியது.

நேதாஜி மற்றும் இந்திய தேசிய ராணுவமும் வரலாற்றுப் பாத்திரம் வகித்தனர்.

நாம் விடுதலை பெற்ற நேரத்தில், துணைக் கண்டம் இந்தியா மற்றும் பாகிஸ்தானாக பிரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி மற்றும் பிரிவினையின் தீமைகள், சமூகங்களின் பரஸ்பர அணுகுமுறையை கடினமாக்கியது. வன்முறையும் பகைமையும் நிறைந்த சூழல் நிலவியது.. அதே நேரத்தில், ஜவஹர்லால் நேரு இந்தியாவை விடுதலைப் போராட்ட நோக்கங்களை இலக்காக்கி வழிநடத்த முனைந்தார். சர்தார் படேல் நாட்டை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார், கம்யூனிஸ்டுகள் சமஸ்தான அரசுகளை எதிர்த்துப் போராடினர் எடுத்துக்காட்டாக, தெலுங்கானாவில் நிஜாமுக்கு எதிரான போராட்டத்தைத் கூறலாம். சட்டப் புத்தகங்களால் சூழப்பட்ட நிலையில், பி.ஆர்.அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

எமது விடுதலை நாளில், அந்தப் போராட்டத்தின் தலைசிறந்த தலைவர் கல்கத்தாவில் இருந்தார். நாட்டின் கிழக்குப் பகுதிகள், வன்முறையால் இரத்தத்தில் குளித்துக் கொண்டிருந்தன. மகாத்மா காந்தி கலவரம் உச்சத்தில் இருந்த நவகாளிக்கு (தற்போது வங்காளதேசத்தில் உள்ளது) சென்றார். கிழக்கு பாகிஸ்தானை உருவாக்கியதால் ஆத்திரமடைந்த கும்பல்களின் சீற்றத்திலிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் உறுதியுடன் அவர் அங்கு இருந்தார். காந்தியின் உண்ணாவிரதம் மக்களின் மீதும், தலைவர்கள் மீதும் அசாதாரணமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இரு சமூகத்தினரும் அமைதியைப் பேணுவதாகவும், மற்ற சமூக மக்களைப் பாதுகாப்பதாகவும் அவருக்கு உறுதியளித்தனர். காந்தியின் தைரியமும் நமதுமக்களின் ஒற்றுமைமீது அவருக்கிருந்த நம்பிக்கையும் மதச்சார்பின்மை மற்றும் பரஸ்பர மரியாதைக்கான பாலமாக மாறியது, அதன் மீது பன்மைப் பண்பாடுகள் நிறைந்த நம் மக்கள் சுதந்திரத்தின் கீழ் முதலடி எடுத்து வைத்தனர்.

விரைவில், நாட்டின் வடமேற்கு நோக்கி, அதே கடமையை சுமந்து கொண்டு காந்தி மற்றொரு பயணத்தைத் தொடங்கினார், ஹரியானா, உ.பி., ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள மேவாட் பகுதி தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. வன்முறைக்கு பயந்து நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு தப்பிச் செல்ல தயாராக இருந்தனர். ஆல்வார் மற்றும் பரத்பூரின் துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளுக்குப் பிறகு அவர்களின் கவலை அதிகரித்தது.

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு மியோ தலைவர் சவுத்ரி யாசின் கானின் வற்புறுத்தலின் பேரில் விஜயம் செய்ய முடிவு செய்த காந்தி, 1947 டிசம்பரில் நடுங்கும் குளிரில் குர்கானுக்கு அருகில் உள்ள கசேரா கிராமத்திற்குச் சென்றார்.

மக்கள் மத்தியில் பேசிய வேட்டி அணிந்த காந்தி, "என்னிடம் அசல் சக்தி இருந்தால், ஒரு முஸ்லீம் கூட இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர





வேண்டிய அவசியமில்லை அல்லது ஒரு இந்து அல்லது சீக்கியர் பாகிஸ்தானில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறி இந்திய ஒன்றியத்திடம் தஞ்சம் கோர அவசியம் இல்லை "

"இந்தியா உங்களுக்கு சொந்தமானது, நீங்கள் இந்தியாவுக்கு சொந்தமானவர்கள்" என்று அறிவித்தார். சிறுபான்மை மக்கள் பாகிஸ்தானுக்குச் செல்வதை விட மதச்சார்பற்ற, ஜனநாயக இந்தியாவில் இருக்க முடிவு செய்தனர்.

இன்று, தேசம் "ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்" ( விடுதலையின் அமுதப் பெருவிழா) ன் நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், நாமும் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொள்கிறோம். மணிப்பூர் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மே 3ஆம் தேதி வெடித்த வன்முறை மாநிலம் முழுவதையும் சூழ்ந்தது

பலரைக் கொன்று, ஆயிரக்கணக்கானோரை இடம் பெயர்த்து, முழு மாநிலத்தையும் நிவாரண முகாமாக மாற்றியது. பச்சாதாபமும் இரக்கமும் அரசுரிமையின் அடையாளங்கள். ஆனால் இன்று அதிகாரம் உள்ளவர்களிடம் இந்த நற்பண்புகள் மிகவும் குறைவு. காந்தியடிகள் காட்டிய துணிச்சலும், ஒற்றுமைக்கான அக்கறையும் பாஜகவுக்கு இல்லை. மணிப்பூரில் பெண்களை ஆடை களைந்து தெருவில் இழுத்துச் செல்லும் தலைகுனிய வைக்கும் வீடியோ வெளியாகும் வரை, இந்த விவகாரத்தில் இந்திய பிரதமரை வாய் திறக்க வைக்க முடியவில்லை.

உயர்நீதிமன்ற உத்தரவு எரியும் தீயில் எண்ணெய் வார்த்தது என்று உள்துறை அமைச்சர் கூறினார். அதன் மூலம், இதற்கு முன்பு அங்கு தீ இருந்தது என்பதை ஏற்றுக் கொண்டார். அரசு தூக்கத்தில் சிக்கியதா? இல்லை, ஆர்எஸ்எஸ்பாஜகவின் "இரட்டை இஞ்சின்" இயங்குவதற்கு எரிபொருள் தேவை. வெறுப்பு தான் அந்த எரிபொருள். அதனால்தான் மணிப்பூரின் அமைதி உடைந்து சிதறியுள்ளது.

ஹரியானா சமீபத்தில் ஆயுதமயமாக்கப்பட்ட மதப் பயன்பாடு என்பதற்கான சரியான உதாரணத்தைக் கண்டது, ஜூலை 31 அன்று பசுக் காவலர் என தன்னைத் தானே அறிவித்துக் கொண்ட ஒருவர், விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்த மத ஊர்வலத்தில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ள சமூக ஊடகங்களில்

அழைப்பு விடுத்ததால், ஆறு பேர் இறந்தனர். பஜ்ரங் தளத்தைச் சேர்ந்த இந்த பசுக் காவலர், பிப்ரவரி மாதம் இரு முஸ்லிம் ஆண்களைக் கடத்திச் சென்று காரில் வைத்து எரித்துக் கொன்றதற்காக தேடப்பட்டு வருகிறார். அதன்பிறகு, அப்பகுதியில் அமைதி முழுதாகக் சீர்குலைந்துள்ளது.

சமூகத்தில்விரிவடைந்து செல்லும்இந்தப் பிளவை சரி செய்ய, சமூக உரையாடலின் மூலம் நம்பிக்கையை வளர்த்தெடுக்க ஆட்சியாளர்கள் முயலவில்லை. இவர்களது கருவி புல்டோசர்தான். காந்தி மிகவும் உணர்ச்சிகரமான நேரத்தில் மேவாட் மக்களிடையே உறவும் பாலங்களைக் கட்டினார். ஆர்எஸ்எஸ் பாஜகவின் வெறுக்கத்தக்க புல்டோசர் இப்பகுதியில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநிறுத்துவதற்கான சாத்தியத்தை தகர்க்கிறது.

வன்முறை நிகழ்ந்த நவகாளி, மேவாத் பகுதிகளில், உடைந்திருந்த தன் கையை வெறும் வேட்டியில் சுற்றிக்கொண்டு காந்தி பயணம் செய்தார். அவர் தனது சொந்த மக்களை பார்த்து அச்சப்படவில்லை. இப்போது கவச வாகனங்களில் செல்லும் ஆட்சியாளருக்கு அந்த நம்பிக்கை இல்லை!

நமது சுதந்திரம் சோதனை காலத்தில் வந்தது. யூனியன் ஜாக்கிற்குப் பதிலாக மூவர்ணக் கொடி மாற்றப்பட்டதால் நவீன வரலாற்றில் மிகப்பெரிய இடப் பெயர்வு நிகழ்ந்தது. வகுப்புவாத வன்முறை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த ஏழை நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்குமா என்ற சந்தேகம் உலகுக்கு இருந்தது. ஜனவரி 26, 1950 அன்று குடியரசாக பிரகடனம் படுத்தப்பட நிலையில். அரசியலமைப்பு சட்டத்தின் வழியில், மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் நலன்புரி அடித்தளங்களை இந்தியாவிற்கு வழங்க, பதவியேற்ற நமது தலைவர்கள் அயராது உழைத்தனர்.

இந்தியாவில் ஜனநாயகம் நிலைத்திருப்பதை சந்தேகிப்பவர்கள் எல்லாம் வெளிநாட்டினர் மட்டுமே அல்ல. மதச்சார்பின்மையை நிலைநிறுத்துவதற்காகவும், இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் காத்ததற்காகவும் மகாத்மா காந்தி கொல்லப்பட்டார், எனினும் நம் நாடு அந்த பேரழிவை தைரியமாக எதிர்கொண்டது.

2014 இல் நரேந்திர மோடிக்குக் கிடைத்தது, சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்ட மற்றும் நமது அரசியலமைப்பின் பார்வையால் வழிநடத்தப்பட்ட நிலையான ஜனநாயகம்.

அவருக்குக் கீழ் கடந்த ஒன்பது வருடங்களில் அந்த நோக்கங்கள் பெரும்பாலும் மிதிபட்டு வருகின்றன. நாம் முன்பு பேசிய பரிவுணர்வும் தைரியமும் எங்கும் காணப்படவில்லை. இதுவே இன்று எமது விலைமதிப்பற்ற சுதந்திரம் எதிர்நோக்கும் சவாலாகும், இதனை மக்களும் உணர்ந்துள்ளனர். தற்போதைய ஆட்சியாளர்கள், இந்தியா என்ற கருத்தாக்கத்தின் மீது நடத்தும் தாக்குதலை அவர்கள் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

காந்தி, நேரு, படேல், அம்பேத்கர் ஆகியோரின் எல்லோரையும் உள்ளடக்கும் எண்ணம் கொண்ட இந்தியா, மானுட விழுமியங்களோடும் தைரியத்துடனும் மேலெழும்பி, கோல்வால்கர், சாவர்க்கரின் சித்தாந்தத்தை விட வலிமையானது என்பதை நிரூபிக்கும்.

**தமிழில் : டி.எம். மூர்த்தி**

**நன்றி : நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்**

## வினாடி - வினா

1 நிலவில் தரையிறங்கி விட்டு வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பி வந்த ஆளில்லா விண்கலத்தின் பெயர்?

2 இந்தியா 2008 அக்டோபர் 22 அன்று நிலவுக்கு அனுப்பிய விண்கலத்தின் பெயர்?


3 நிலவின் சுற்றுவட்டப் பாதைக்கு சென்ற முதல் விண்கலம் எது?

4 விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் பெயர் என்ன?

5 நிலவில் காலடித் தடம் பதித்த முதல் நபர் யார்?

6 லெனினின் சகோதரர் யாரை படுகொலை செய்ய முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



2ம் பக்கத் தொடர்ச்சி

இன்றைய ஒன்றிய அரசு காவிரி நதிப் பிரச்சினையில் நேர்மையாக நடந்து கொள்ளாத நயவஞ்சகப் போக்கை கண்டித்து எடப்பாடி என்ன செய்யப் போகின்றார்?

ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை என அண்ணா கூறினார். அவரது பெயரால் கட்சி நடத்தும் எடப்பாடியார் நிலை என்ன?

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று அண்ணா கூறினார்.

இன்றைய ஒன்றிய அரசு மாநில அதிகாரங்களையெல்லாம் நாள்தோறும் பறித்து சட்டம் நிறைவேற்றி வருகின்றது.

மாநில அதிகாரங்கள் பறிபோவது குறித்து எடப்பாடியாரின் நிலை என்ன?

மாநில ஆளுநர் அத்துமீறுகின்றார், அராஜகம் புரிகின்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக போட்டி அரசு நடத்துகின்றார். இது குறித்து எடப்பாடியாரின் நிலை என்ன?

எனக்கு அதிகாரம் இருந்தால் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் மசோதாவில் கையெழுத்திட மாட்டேன் என்று பகிரங்கமாக ஆளுநர் ஆர்.என்.ரவி கூறுகின்றார்! அவர் அவ்வாறு கூறுவதை எடப்பாடியார் ஏற்கின்றாரா? மறுக்கின்றாரா?

தமிழக மாணவர்களை பாதிக்கும் நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு வேண்டுமென தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது பேரவையில் மசோதா நிறைவேற்றி னீர்கள்.

அதனை இன்று திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசு தலைவரின் கையெழுத்துக்காக காத்துக் கிடக்கின்றது.

விலக்களிக்க மறுக்கும் ஒன்றிய அரசோடு உறவாக இருக்கும் நீங்கள், உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி விலக்கு பெற முயல்வீர்களா? மறுப்பீர்களா?

டெல்லியில் கடந்த ஜூலை 18 ல் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டத்தில் தாங்கள் கலந்து கொண்டது மட்டுமல்ல, மோடிக்கு அடுத்த இடத்தில் அமர்ந்து அலங்கரித்தீர்கள். அந்த அளவிற்கு மோடியிடம் செல்வாக்கு மிக்க நபராக திகழும் தாங்கள் நீட்டிற்கு விலக்கு அளிக்க பேசி வற்புறுத்தி, விலக்கு பெற்று சாதனை படைத்து, தமிழக மாணவர்கள் நலன் காத்திடலாமே!

மாணவர்களும், மாணவிகளும் 30க்கும் மேற்பட்டோர் மட்டுமல்லாது, மகனோடு சேர்ந்து தந்தையும் மரணத்தை தழுவியதை தவிர்த்து இருக்கலாமே!

நீட் நுழைவுத் தேர்வு என்பது திமுகவின் பிரச்சனையா?

எடப்பாடியார் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து அலங்கரித்த போது தான் அன்றைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கரும், ஏனைய அமைச்சர் பெருமக்களும் டெல்லி பட்டணத்திற்கு காவடி எடுத்து பிரதமர், உள்துறை அமைச்சர் என தினசரி பார்த்தது மட்டுமல்ல நிச்சயமாக, உறுதியாக நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கிடைக்கும் என்று உறுதிமொழி தந்தீர்கள்.

அன்று, ஒன்றிய அரசில் இணை அமைச்சராக இருந்த, இன்றைய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் உங்கள் அமைச்சரவை சகாக்களிடம் "ஜல்லிக்கட்டிற்கு அவசர சட்டம் மூலமாக அனுமதி பெற்றது போல், நீட்டிற்கும் ஓர் அவசர சட்டத்தை நிறைவேற்றுங்கள், விதிவிலக்கு பெற்று தருகிறோம்" என்று வாக்குறுதி கொடுத்தாரா இல்லையா? வாக்குறுதி அளித்திட்ட மறுநாள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்த போது உங்கள் அரசு (தமிழ்நாடு) சார்பில் விலக்கு கேட்டு வாதாடிய போது, மோடி அரசின் சார்பில் ஒரு மாநிலத்திற்கு மட்டும் (தமிழ்நாடு) விதிவிலக்கு அளிக்க முடியாது என வாதிட்டதை தொடர்ந்து உச்ச நீதிமன்றம், ஒன்றிய அரசின் வாதத்தை ஏற்று விலக்களிக்க முடியாது என்று தீர்ப்பளித்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளியாகும் வரையில் நம்பிக்கையோடு காத்திருந்த அரியலூர் அனிதா இனி நம்மை போன்றவர்களுக்கு வாய்ப்பில்லை எனக் கூறி தன்னை மாய்த்துக் கொண்டார் என்பது தானே உண்மை! ஒன்றிய அரசின் பிடிவாதத்தை ஆதரிக்கின்றாரா? எதிர்க்கின்றாரா?

எம்.ஜி.ஆரைப் போன்று, ஜெயலலிதாவைப் போன்று தன்னையும் ஒரு புரட்சித் தமிழராக ஆக்கிக் கொண்ட எடப்பாடியாரே, மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஆயிரமா? லட்சமா? கோடியா? என்பதல்ல முக்கியம். என்ன நோக்கம் என்பதே முக்கியம். நரேந்திர மோடியின் தலைமையிலான ஆட்சியை நாடே நிராகரிக்கின்ற நிலையில் சரிந்து விழப்போகும் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க முனைந்துள்ளீர்களே இதுதான் தங்களின் தலையாய கொள்கையா?

எத்திசை நோக்கி செல்கின்றோம் என்ற குறிக்கோள் இன்றி, கார்ப்பரேட் வகுப்புவாத அணிக்கு செல்வதால் என்ன பயன்?

அறுக்க மாட்டாதவன் இடுப்பில் 58 அரிவாள் இருப்பது போன்று புரட்சித்தமிழர் பட்டம் பெற்று என்ன பயன்?

மீண்டும் சந்திப்போம்! வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# இந்தியா நிலவில் இறங்கும்!


**இந்தியாவின் சந்திராயன் வரும் 23ஆம் தேதி நிலவில் தென் துருவப் பகுதியில் வெற்றிகரமாக இறங்கும் என இஸ்ரோ விஞ் ஞானிகள் நம்புகிறார்கள்.**


மு.வீரபாண்டியன்

ஒட்டுமொத்த நாடும் இஸ்ரோ முயற்சியில் வெற்றி பெற என்னுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விண்வெளி ஆய்வுகளை எப்போதும் ஆதரித்தே வந்துள்ளது

விண்வெளி ஆய்வுகளில் ரஷ்யா, அமெரிக்கா, சீனா மற்றும் மேற்குலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்தியாவும் மேற்கண்ட நாடுகளுக்கு சற்றும் குறையாத முயற்சிகளை மேற்கொள்கிறது. விக்ரம் சாராபாய், அப்துல் கலாம், இஸ்ரோ சிவன் என இதன் பட்டியல் மகத்தானது.

நிலவில் தென் துருவ பகுதி சூரிய வெளிச்சம் அற்றது. அங்கே சந்திராயன் தரையிறங்குவது சவால் நிறைந்தது. ரஷ்யா, அமெரிக்கா கூட எடுக்க முடியாத புதிய முயற்சி இது.



இந்தியா விண்வெளி ஆய்வுகளில் விரைவில் மிகப்பெரிய வெற்றிகளை பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

இஸ்ரோவின் நிலவு முயற்சி, பல ஆண்டுகளாக திட்டமிடப்பட்டது. 40 நாட்கள் சந்திராயன் நிலவுப் பயணம் பிரமிப்பூட்டுகிறது. ஆனால், பத்து நாட்களில் நிலவுக்கு ரஷ்யா லூனா அனுப்ப எடுத்த முயற்சி வியப்பூட்டுகிறது. பத்து நாட்களில் அது நிலவை எட்டியது. தரை இறங்கும் கடைசி நிமிடம் மோதி சிதறியது. இது விஞ்ஞான உலகில் இயல்புதான்.

அன்றைய சோவியத் யூனியன் முதன் முதல் விண்வெளியில் ஸ்புட்னிக் அனுப்பியது. முதன் முதலில் யூரி ககாரின் பறந்தார். பின்னர் வாலெண்டினா, சோவியத் நாட்டின் விண்வெளி ஆய்வுகள்தான் அமெரிக்காவின் அப்பல்லோவும், ஆம்ஸ்ட்ராங்கும், எட்வினும் நிலவில் கால் பதிக்க உதவியது.

மனிதன் நிலவில் கால் பதிக்க, முதன் முதலில் நாய், குரங்குகளை (லைக்கா,சியாம்) அனுப்பி செய்த சோதனைகள் வெற்றிக்கு உதவின

ரஷ்யாவின் லூனா தோல்வி அனுபவம், நமது நாட்டின் சந்திராயன் வெற்றிபெற வழிவகுக்கும் ரஷ்யா, இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடு என்பதால், தனது விண்வெளி அனுபவங்களை இந்தியாவுடன் ரஷ்யா பகிர்ந்திருக்கும்.

ரஷ்யா 10 நாட்களில் நிலவுக்கு செல்லும் முயற்சி, இந்தியாவை பின்னுக்குத் தள்ளவே என்ற தவறான செய்தி பரவியது.

இந்தியா விண்வெளி செல்ல, இந்தியாவின் ராஜேஷ் ஷர்மா, மல்கோத்ராவுக்கு பயிற்சி அளித்தது அன்றைய சோவியத் யூனியன்.

கிரோஜனிக் விண்கலம் என்ஜின் பிரச்சனையின் போது இந்தியாவுக்கு தேவைப்பட்ட உதவிகள் செய்வோம் என்றதும் ரஷ்யாதான்.

நம்மை தாக்க, அமெரிக்கா கடற்படை வந்த போதும், நில். இந்தியா என் நண்பன் என தடுத்து நிறுத்தியதும் ரஷ்யா தான்.

ஆக, விண்வெளி பயணத்தை விட, மிக நெடியது. மிகச்சிறந்தது இந்திய ரஷ்ய நட்பு.

விண்வெளி ஆய்வுகளில் தோல்விகள்தான் வெற்றிக்கான பாடங்கள் என்றார் யூரி ககாரின்.

யூரி ககாரின் இந்தியா வந்தபோது நேரு அவரிடம் உரையாடல் செய்தார். விண்வெளியில் இருந்து நமது பூமியை பார்க்க எப்படி இருக்கிறது என்றாராம் நேரு. ஒரு சிறு கோடு தெரிகிறது அவ்வளவுதான். ஆம் அந்தக் கோடு சீன பெருஞ்சுவர்.

சீனப் பெருஞ்சுவர் பயத்தின் அடையாளம். படையெடுத்தால் பாதுகாப்பு என்ற அடையாளம். இந்த உலகில் வெறுப்பும், பகைமையும் நீங்க வேண்டுமென்ற அடையாளம். அத்தகைய புதிய உலகம் குறித்து, யூரின் ககாரியின் கனவுகளை கொண்டிருந்தார். அதே கனவுகள் இஸ்ரோவுக்கும்.

வானைஅளப்போம்
கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல்
கண்டு தெளிவோம்!
என்றான் பாரதி.

இஸ்ரோ முன்னேறும்! வெற்றி பெறும்!

தொடர்புக்கு:

# 'பூங்காற்று திரும்பு' நூல் வெளியீட்டு விழா



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருப்பூர் வடக்கு மாநகர் மாதாந்திர இலக்கியக் கூட்டம் திரு. வி. க நகர் மனவளக்கலை மன்றத்தில் ஆசிரியர், க. இராமசுப்பிரமணியன் தலைமையில் நடை பெற்றது.

கூட்டத்தில் மாநிலத் துணைச்செயலாளர், த.சசிகலா, மாநிலக்குழு உறுப்பினர் எஸ். ஏ. காதர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கு, எஸ்.சண்முகம், ஆசிரியர், மேரிநிர்மலா, ரா.தமிழ்ச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வரவேற்பு உரையை ஆசிரியர், மு.ராஜா நிகழ்த்தினார். துவக்க உரையை எஸ். ஏ. காதர் நிகழ்த்தினார்.

மக்கள் இசைப்பாடல்களை, திரை இயக்குநர், து.சோ.பிரபாகர் அவர்களும் கவிஞர் கா.ஜோதி அவர்களும் பாடினர்.

வாழ்த்துரையை திருப்பூர் தாய்த் தமிழ்ப்பள்ளியின் தாளாளர் கு. நா. தங்கராசு அவர்கள் வழங்கினார்.

"பற்றி எரியுது மணிப்பூர் பற்றவைத்தது யார்?" என்ற தலைப்பில், பாரதி சுப்பராயன் உரையாற்றினார்.

கவிஞர்கள் திருப்பூர் புவனேஸ்வரி, லதாஹரி சுசீலாராமமூர்த்தி, மேரி நிர்மலா, அங்குலட்சுமி கவிதைகளை வாசித்துச் சிறப்பித்தனர்.

எஸ்.ஏ.காதர் எழுதிய "பூங்காற்று திரும்பு" நாவலை பாரதிசுப்பராயன் வெளியிட தாய்த் தமிழ்ப்பள்ளி தாளாளர் கு. நா. தங்கராசு, த. சசிகலா பெற்றுக் கொண்டனர்கள்.

நூலை அறிமுகம் செய்து வைத்து, முனைவர்,மேரி ரோஸ்லின் அவர்கள் நூலின் சிறப்பை எடுத்து வைத்தார்.

ஏற்புரையை, நூல் ஆசிரியர் எஸ்.ஏ.காதர் நிகழ்த்தினார். நிகழ்ச்சியை ஆசிரியர், அ.பழனி, ஆர்.தளபதி விஜயராஜாவும் தொகுத்துவழங்கினார்கள்.

நன்றியுரை எஸ். சீனிவாசன் வழங்கினார்.

# இந்துத்துவ அரசியலும் வாக்குகளுக்கு வலை விரிக்கும் அறிவிப்புகளுமே பிரதமரின் சுதந்திர தின உரை



வ.மணிமாறன்

**பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து இந்தியா விடுதலை பெற்றதன் 77வது ஆண்டு விழாவில், 'ஆயிரம் ஆண்டு அடிமைத்தனம்' என்ற வெறுப்பு அரசியலை பிரதமர் மோடி புதுப்பித்திருக்கிறார். 2024 நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையை பாஜக எப்படி மேற்கொள்ளப் போகிறது என்பதை அவருடைய இந்தப் பேச்சு வெளிப்படுத்தியிருக்கிறது.**

இந்தியா சுதந்திரம் பெற்றதன் 77வது ஆண்டு விழா டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக் கொடியை ஏற்றி சுதந்திர தின உரையாற்றினார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் இருந்து இந்தியா விடுதலை பெற்றதன் கொண்டாட்டத்தில், "1000 –1200 ஆண்டுகளுக்கு முன் நமது நாடு ஆக்கிரமிக்கப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம்" என்று பிரதமர் மோடி கூறுகிறார்.

முகலாய ஆட்சியின் கீழ் இந்தியாவிற்கு 'சுதந்திரம்' இல்லை என்ற சங்பரிவாரின் பிளவுவாத, மதவெறி அரசியலைப் பேசுகிறார்.

"வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்கும்போது, அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் செல்லும் தருணங்கள் உள்ளன. அவற்றின் தாக்கம் பல நூற்றாண்டுகளுக்கு நீடிக்கும். 1000 –1200 ஆண்டுகளுக்கு முன் நமது நாடு ஆக்கிரமிக்கப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒரு சிறிய ராஜ்யமும் அதன் மன்னரும் தோற்கடிக்கப்பட்ட நிகழ்வு, இந்தியாவை ஆயிரம் ஆண்டுகால அடிமைத்தனத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை நாம் அறிந்திருக்க முடியாது" என்று பிரதமர் மோடி பேசுகிறார். இதன் மூலம் முகலாய மற்றும் இஸ்லாமிய மன்னர்களுக்கு எதிரான சங்பரிவாரின் அரசியலை எடுத்துரைக்கிறார்.

"ஒரு நிகழ்வு சிறியதாகத் தோன்றலாம், ஆனால் அதன் விளைவுகள் ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும். இன்று, நான் இதைக் குறிப்பிட விரும்புவது ஏனென்றால், இந்தக் காலகட்டத்தில், நாடு முழுவதும் உள்ள துணிச்சலான இந்தியாவின் ஆன்மாக்கள் சுதந்திரத்தின் சுடரை தொடர்ந்து கொண்டு செல்கின்றன" என்று பிரதமர் மோடி தொடர்கிறார்.

நரேந்திர மோடி கூறும் 'துணிச்சலான இந்தியாவின் ஆன்மாக்கள்' யார்? அவர்கள் தொடர்ந்து கொண்டு செல்லும் சுடர் எது?

குஜராத் மதவெறி வன்முறை, பாபர் மசூதி இடிப்பு, மணிப்பூர் வெறியாட்டம், அரியானா அட்டூழியம் என அடுக்கிக் கொண்டே செல்லக்கூடிய செயல்களை தான் நரேந்திர மோடி சொல்லும் 'துணிச்சலான ஆன்மாக்கள்' நிகழ்த்தியுள்ளனர்.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்வுகளைப் பற்றி நான் ஒரு காரணத்திற்காகவே பேசுகிறேன். ஏற்கனவே, நாம் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தைப் போல், நம் நாட்டின் முன் இன்றைய காலத்தில் மற்றொரு வாய்ப்பைக் காண்கிறேன். 'அமிர்த காலத்தின்' முதல் ஆண்டில் பாரத அன்னையின் மடியில் தவழ்கிறோம் என்பது நமது நல்வாய்ப்பாகும். நாம் மேற்கொள்ளும் செயல்கள், நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், நாம் செய்யும் தியாகங்கள், இந்த சகாப்தத்தில் நாம் மேற்கொள்ளும் தவம் ஆகியவை நமது பாரம்பரியத்தை வரையறுக்கும் என்ற எனது வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்" என்று மேலும் அவர் கூறுகிறார்.

செங்கோட்டையில் நின்று கொண்டு, நாட்டின் பிரதமராக உரையாற்றாமல் சங்பரிவாரத்தின் தளகர்த்தராகப் பேசுகிறார். நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியை ஈட்ட வேண்டும் என்பதற்காக, இந்துத்துவ மதவெறி அரசியலை அவர் மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறார்.

பிரதமர் மோடி சுதந்திர தின உரையை தொடங்கும் போது, "நாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அனைவருக்கும் எனது மரியாதையை செலுத்துகிறேன்" என்று கூறுகிறார்.

அடுத்து, "மதிப்பிற்குரிய மகாத்மா காந்தியடிகள், பகத்சிங், சுக்தேவ், ராஜ்குரு போன்ற மாவீரர்கள்.." என்று பெயர்களைக் கூறிவிட்டு,

"நாட்டின் சுதந்திரத்திற்கு பங்களிக்காதவர்களே இருக்க முடியாது"

"சுதந்திர கனவோடு வாழாத இந்துஸ்தானிகளே இல்லை" என்று பிரதமர் மோடி தொடர்கிறார்.

ஆர்எஸ்எஸ், சங்பரிவார் அமைப்புகள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது வரலாறு. இதனை வரலாற்று ஆசிரியர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் பிரதமர் மோடி வரலாற்றைத் திரித்து முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்கிறார்.

ஊழல், குடும்ப ஆதிக்கம், சலுகை அரசியல் ஆகிய மூன்று தீமைகள் என்று பிரதமர் மோடி பேசுகிறார். எதிர்க்கட்சிகளை சாடுவதற்கான உத்திகளாக இவற்றை அவர் முன்வைக்கிறார்.

பாஜக ஆட்சியில் 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக கணக்கு தணிக்கை துறையின் அறிக்கையை மேற்கோள்காட்டி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பாஜக ஆளும் மாநிலங்களில் ஊழல் தலைவிரித்தாடுவது அம்பலமாகி இருக்கிறது. கர்நாடகாவில் ஊழலால் பாஜக ஆட்சியை இழந்திருக்கிறது.

மூன்று தீமைகளில் பிரதமர் மோடி கூறும் சலுகை அரசியல் என்பது மதச் சிறுபான்மையினரை இஸ்லாமிய, கிறிஸ்தவர்களை சமாதானப்படுத்தும் அரசியலை எதிர்க்கட்சிகள் செய்வதாக சாடுகிறார். பாஜக நீண்ட நாட்களாகப் பேசி வரும் இந்தப் பிளவுவாத அரசியலைத்தான் புதிய வார்த்தைகளில் பிரதமர் மோடி புதுப்பித்திருக்கிறார்.

பிரதமர் மோடி முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய விடுதலை நாள் உரையைப் போன்றே தற்போதும், நாட்டின் ஒவ்வொரு சாதனையும் தன்னால் நிகழ்ந்ததாக பீற்றிக்கொள்கிறார். நாட்டின் தவிர்க்க முடியாத முன்னேற்றத்தைக் கூட, தங்களால் நிகழ்த்தப்பட்ட பெரும் வெற்றியாகப் பட்டியலிட்டுள்ளார்.

பிரதமர் மோடி கடந்த காலத்தில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது குறித்துப் பேசவில்லை. மக்களின் பிரச்சனைகள், மக்கள் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்தும் அவர் கவலைப்படுவதில்லை. இவற்றையெல்லாம் கவனமாகத் தவிர்த்து விட்டுதான், விடுதலை நாள்களில் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார்.

இந்தியா அடுத்த ஐந்து ஆண்டுகளில், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக முன்னேற்றம் அடையும் என்று அவர் உறுதியளித்துப் பேசுகிறார்.

ஆனால் இந்தியா 2028 ஆம் ஆண்டில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இருக்கும் என கோல்டுமேன் சாக்ஸ் பகுப்பாய்வு அறிக்கை 2013 ஆம் ஆண்டே மதிப்பிட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரம் 2075 ஆம் ஆண்டுக்குள் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக முன்னேற்றம் அடைந்துவிடும். இந்தியப் பொருளாதாரத்தின் கட்டமைப்பும், அதன் வளர்ச்சி விகிதமும் இதனை சாதித்து விடும். இவையெல்லாம் தங்களால் நிகழ்த்தப்பட்ட சாதனையாக பிரதமர் மோடி மார்தட்டிக் கொள்கிறார்.

இப்படி பெருமைப்பட்டுக் கொள்ளும் போதே, 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்தியா பலவீனமான ஐந்து பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்தது என பிரதமர் மோடி குற்றம்சாட்டுகிறார். உண்மை என்ன?

2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை, அதாவது நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்கும் வரை, இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் சராசரியாக 7.8 விழுக்காடு இருந்தது.

நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்ற 2014 ஆம் ஆண்டு இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி 6.4 விழுக்காடாக சரிந்தது. அதனைத் தொடர்ந்து, கடந்த 9 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் சராசரியாக 5.7 விழுக்காடாக சுருங்கி விட்டது. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட பின்னடைவு மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

பிரதமர் மோடி பதவியேற்ற நாளிலிருந்து, கடந்த 9 ஆண்டுகளில் நாட்டின் வேலையின்மை 22 விழுக்காட்டிற்கு மேல் அதிகரித்துள்ளது.

2014 முதல் 2022 ஆம் ஆண்டுவரை அரசு வேலைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் 22 கோடி பேர். அவர்களில் 7 லட்சத்து 2 ஆயிரம் பேருக்கு மட்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது என மக்களவையில், ஒன்றிய பணியாளர் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். வேலை வாய்ப்பு அளிப்பதில் தொடர்ந்து வீழ்ச்சி; பெரும் பின்னடைவு.

2014 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில், 'இந்தியாவை உருவாக்க வாருங்கள்' என உலக நாடுகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். 2022 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தித் துறையில் 10 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதே இலக்கு என்று அறிவித்தார்.

அப்படி 10 கோடி பேருக்கு வேலை வழங்கப்பட்டதா? உண்மையில் நடந்தது என்ன? விடுதலை நாள் உரையில் பிரதமர் விளக்கம் அளித்திருக்க வேண்டுமே. அளித்தாரா? இல்லை. உண்மையில் 2016 ஆம் ஆண்டு முதல், கடந்த ஏழு ஆண்டுகளில் 15 லட்சம் வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும். 100 நவீன நகரங்கள் (ஸ்மார்ட் சிட்டி) உருவாக்கப்படும். அனைவருக்கும் வீடுகள் கட்டித் தரப்படும். மின்சாரம் இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும் இவையெல்லாம் பிரதமர் மோடி கடந்த காலத்தில் அளித்த வாக்குறுதிகள். இவை பற்றி அவருடைய விடுதலை நாள் உரையில் பேச்சு மூச்சே இல்லை. பிரதமர் மோடியின் பேச்சுகள் எதார்த்தத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் கனவுகளிலும் கற்பனைகளிலும் மூழ்கியதாகவும், மிகைப்படுத்தப்பட்டதாகவுமே உள்ளன.

விலைவாசி ஏறிக்கொண்டே செல்கிறது. பண வீக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் சாதாரண மக்கள் கவலை அடைந்துள்ளனர். ஆனால், பிரதமர் மோடி இந்தப் பிரச்சனைகளை ஒதுக்கி விட்டு "பண வீக்கத்தை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடிந்தது" என்று கூறி விட்டுப் போகிறார்.

அவர் உரையாற்றுவதற்கு முந்தைய நாள், சில்லறை பணவீக்கம் கடந்த 15 மாதங்களில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது என ஒன்றிய புள்ளிவிவர அமைச்சகம் தெரிவித்துள்ளது. காய்கறி விலைகள் ஆண்டுக்கு ஆண்டு 37 விழுக்காடு அதிகரித்துள்ளது. எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலையேற்றம் சாமானிய மக்களை கடுமையாக பாதித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

செங்கோட்டையில் கொடியேற்றி விட்டு பிரதமர் மோடி ஆற்றும் உரையில், பட்டியலிடும் சாதனைகளுக்கும்; அவற்றின் உண்மை நிலைக்கும் பெரும் முரண்பாடு உள்ளது. சுருக்கமாகச் சொன்னால், பிரதமர் மோடியின் உரை செயல் திட்டங்கள் எதுவும் இல்லாத, வெற்று விளக்கங்களால் ஆனது. இவற்றுடன் நவரசமும் வேண்டும் என்பதற்காக கொஞ்சம் கண்ணீரும் விட்டிருக்கிறார்.



இந்துத்துவ அரசியல் கொள்கை சார்ந்த பார்வையும், கற்பனைகளை (பொய்களை) விதைக்கும் உத்தியும், வாக்குகளுக்கு வலை விரிக்கும் அறிவிப்புகளும் நிறைந்தது தான் பிரதமர் மோடியின் சுதந்திர தின உரை. வழக்கமான உரை வீச்சு உத்திகளையே பிரதமர் மோடி கையாண்டிருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலை பாஜக எப்படி அணுகப்போகிறது என்பதை இதில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தொடர்புக்கு: 9500001224

# வண்டவாளம்

## மோடி அரசை எதிர்த்து மணிப்பூரில் பிரம்மாண்டமான நாகா பேரணி




வடகிழக்கு மாகாணமான நாகலாந்தில் வன்முறைகளுக்கு தீர்வு காணும் வகையில், 2015 ஒன்றிய அரசுடன் நாகாலாந்து தேசிய சோசலிச கவுன்சில் அமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் இறுதியாக்க படவில்லை இந்த நிலையில் அரசு ஆதரவோடு வன்முறை வெடித்துள்ளது.

மணிப்பூர் மலைப்பகுதியில் குக்கி, நாகா மற்றும ஜோ சமூகத்தினர் வசித்து வருகின்றனர். தமேங்லாங், சேனாபதி, உக்ருல், மற்றும் சண்டே உள்ளிட்ட மாவட்டங்களில் நாகா மக்கள் பெருமளவில் வசிக்கின்றனர்.

மணிப்பூர் சட்டமன்றத்தில் 60 உறுப்பினர்களில் 10 பேர் நாகா சமூகத்தை சேர்ந்தவர்கள். இதில் ஏழு பேர் பாஜகவினர்.

வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் இவர்கள் பங்கேற்க கூடாது என்று நாகா மக்கள் வலியுறுத்தியத்துடன், ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் விரைவில் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தத்தை உறுதி செய்ய வேண்டும் என்று நாகா சமூகத்தினர் மிகப் பிரமாண்டமான பேரணியும் நடத்தினர்.

## பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளை முன்கூட்டி விடுதலை செய்தது ஏன்?



2002 ஆம் ஆண்டு குஜராத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையில், பில்கிஸ் பானு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட பதினோரு பேருக்கு மட்டும் குஜராத் அரசின் தண்டனைக் குறைப்பு கொள்கை பின்பற்றப்பட்டது ஏன் என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.


கோத்ரா நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற நிலையில் மற்ற நீதிமன்றத்தில் குற்றவாளிகளை விடுவிக்க கருத்து கேட்கப்படாதது ஏன்?

குற்றவாளிகளை முன்கூட்டி விடுதலை செய்ததை பொறுத்த அளவில் குஜராத் அரசு இக்கட்டான சூழலில் மாட்டிக் கொண்டுள்ளது என்றும் நீதிமன்றம் இடித்துள்ளது.

தண்டனை குறைப்பு அல்லது குற்றவாளிகள் விடுதலை செய்வது தொடர்பான பரிந்துரை வழங்கிய சிறை ஆலோசனைக் குழு எந்த அடிப்படையில் அமைக்கப்பட்டது? மற்ற குற்றவாளிகள் 14 ஆண்டுகள் தண்டனை கழித்த பின்பும் ஏன் விடுதலை செய்யப்படவில்லை? என்றும் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

இது போன்ற கேள்விகளால் குஜராத் அரசை உச்சநீதிமன்றம் வறுத்து எடுத்துள்ளது.

## நிலக்கரி இறக்குமதி முறைகேடு ஜாமீன் வழங்க உச்ச நீதிமன்றம் மறுப்பு



இந்தோனேசியாவில் இருந்து தரம் குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்து அரசை ஏமாற்றியதாக அகமது ஏ. ஆர். புகாரி, தேசிய அனல் மின் கழகம் உலோகங்கள் மற்றும் தாதுக்கள் விற்பனை நிறுவனம் ஆகியவற்றின் மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்து இருந்தது.

இந்த முறை கேட்டின் 564 கோடியே 48 லட்சம் ரூபாயை அகமது புகாரி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்துள்ளார் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புகாரியின் 557 கோடி ரூபாயும் அமலாக்கத்துறை முடக்கி வைத்தது அகமது புகாரியின் ஜாமீன் மனுக்கள் சிறப்பு நீதிமன்றத்தால் தொடர்ந்து தள்ளுபடி செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அடர்ந்த 16ஆம் தேதி நிபந்தனை ஜாமீன் வழங்கப்பட்டது. ஜாமீனுக்கு தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது.

ஜாமீன் உத்தரவு இது கருப்பு வாதங்கள் குறித்து வைக்கப்படவில்லை எனக் கூறி ஜாமீன் உத்தரவுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது

இந்த ஊழல் முறைகேடு நடந்தது 2014 ஆம் ஆண்டு. அகமது புகாரிக்கு பாஜகவின் ஆதரவு உண்டா என்பதே கேள்வி?

## பாசிச பா.ஜ.கவே ஆட்சி

# ஏஐஒய்எப் - ஏஐஎஸ்எப் இ



க.பாரதி




மணிப்பூரில் நடைபெற்ற கலவரம் ஏதோ இரு சமூக மக்களிடையே இயல்பாக ஏற்பட்ட கலவரம் அல்ல.

இக்கலவரம் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலுக்கான பா.ஜ.கவின் அரசியல் மூலதனமாகும்.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கேட்டு போராட்ட வழிமுறையின் உச்சமாக நிர்வாணமாக நின்று போராடிய மணிப்பூரில்தான், பெண்களை நிர்வாணமாக்கி இழுத்துச் செல்லப்படும் கோரம் நிகழ்ந்துள்ளது.

ஒன்றிய பாஜக அரசின் வகுப்புவாத கோர முகத்தை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

300 ஆண்டுகள் பழமையான மைத்திகளின் ‘சனமகி’ பண்பாடும், இந்து மத சம்பிரதாயங்களும் ஒன்றோடு ஒன்று பிணைந்துகிடக்கிறது. இதனால், பெரும்பான்மை மைத்திகள் மீது அக்கறை காட்டுவதாகச் சொல்லிக்கொண்டு, சிறுபான்மையினரான கிறிஸ்தவ குக்கி பழங்குடிகளை அவர்களுக்கு நேரெதிராக நிறுத்தும் அரசியல் அங்கு பா.ஜ.கவுக்குப் பலனளித்திருக்கிறது. இதற்காக, மணிப்பூரில் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று மைத்திகள் தரப்பிலான கோரிக்கை முதன்மை படுத்தப்படுகிறது. இது பழங்குடியினரை சமவெளிகளில் இருந்து வெளியேற்றுவதற்கான மறைமுகக் குரல்தான்.

ஒருபுறம், காட்டைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றி, அவர்களின் வீடு, கட்டடங்களை இடிக்கும் பணிகளையும் ஆளும் பா.ஜ.க அரசு மேற்கொள்கிறது. மறுபுறம், சட்டமீறல்களுடன் மலைப் பகுதியில் பழங்குடியினர் அல்லாதவர்களின் ஆக்கிரமிப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதற்கிடையே, அண்டை நாடுகளிலிருந்து குக்கி இனப் பழங்குடிகள் மணிப்பூரில் ஊடுருவி இருக்கிறார்கள் என்றும், அவர்களை உள்ளூர் குக்கி மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று திட்டமிட்ட வெறுப்புப் பிரசாரமும் அங்கு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் நாமறிந்த இந்துத்துவ அமைப்புகள் போலவே, மணிப்பூரிலும் அரம்பை தெங்கால், மைத்திலீபன் உள்ளிட்ட சில பாசிச பா.ஜ.கவின் ஆசிபெற்ற இந்துத்துவ அமைப்புகளே இந்த வன்முறையினை முன்னின்று நடத்தியிருக்கின்றன. நவீனரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை ஏந்தியபடி இருச்சக்கர வாகனங்களில் கும்பலாகச் சென்று, காவல் நிலையங்களைச் சூறையாடி, குக்கி பழங்குடி கிராமங்களில் புகுந்து, அவர்களின் வீடுகளை, பொருட்களை, பெண்களை, ஆண்களை நாசம் செய்து கொலைகளில் ஈடுபடுகின்றன. இந்த இந்துத்துவ அமைப்புகளின் முக்கிய கொள்கை, மணிப்பூரின் மன்னர் காலத்துப் பண்பாடான ‘சனமகி’ ராஜ்ஜியம் திரும்பவும் வரவேண்டும் என்பதுதான். மணிப்பூர் மாநில ஆர்.எஸ்.எஸ் தலைமையகத்தில் பறப்பது இவர்களின் சனமகி கொடியே.

பொருளாதார ரீதியாக, பழங்குடிகளின் நிலம்தான் சமவெளியில் வாழும் மைத்திகளின் இலக்கு. தங்களையும் பழங்குடிகளாக அறிவித்துவிட்டால், மலைப்பகுதி நிலங்களை அவர்களால் வாங்கிவிட முடியும். ஆனால், இது மைத்திகளின் ஒட்டுமொத்த மனநிலை அல்ல. அதே சமூகத்தின் பணம் படைத்த அதிகார வர்க்கத்தின் கோரிக்கை. பா.ஜ.க அரசின் தேசிய சமையல் எண்ணெய்

## 7.5 லட்சம் கோடி ரூபாய் மெகா ஊழல்

1ம் பக்கத் தொடர்ச்சி

மாலா திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 75,000 கிமீ சாலை போடுகிற திட்டத்தில் எவ்வளவு ஊழல் செய்திருப்பார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

**பாரத் மாலா திட்டம்**

நாட்டில் நெடுஞ்சாலை மற்றும் மேம்பாலம் கட்டுமான திட்டங்களுக்கு மோடி அரசு சூட்டிய பெயர்தான் பாரத் மாலா திட்டம். இந்த திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்கான திட்ட மதிப்பை 15.37 கோடியிலிருந்து 32.17 கோடி ரூபாயாக இரு மடங்கு அதிகரித்துள்ளதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. கடந்த நிதியாண்டில் 34,000 கிலோ மீட்டர் சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் வரையில் 13,499 கிலோ மீட்டர் சாலை அமைக்கப்படிருப்பதை அறிக்கை எடுத்துக் கூறுகிறது. ஆக திட்டமிட்ட இலக்கில் பாதி கூட முடியாத நிலையில், திட்ட மதிப்பு மட்டும் பல மடங்காக உயர்ந்துள்ளதை அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

திட்டத்திற்கான ஒப்பந்தங்களை வழங்கியதிலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக முறையான திட்ட அறிக்கை இல்லாதது, போலியான நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியது, சுற்றுசூழல் அனுமதி பெறாமல் திட்டத்தை செயல்படுத்தியது என பல்வேறு விதி மீறல்களை அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

**ரயில்வே துறை ஊழல்**

இந்திய ரயில்வே துறையில் கடந்த 202122 நிதியாண்டில் ஒப்புதல் இல்லா செலவீனமாக சுமார் 23,885.47 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாகவும், 20202021 நிதியாண்டில் சுமார் 8,127.97 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாகவும், அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. கடந்த 201819 ஆம் ஆண்டுமுதல் 202021 ஆண்டுவரை இவ்வாறு ஒப்புதல் இல்லாத செலவீனங்களை முந்தைய கணக்கு தணிக்கை ஆணைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தும் நடப்பாண்டில் மீண்டும் ஒப்புதல் செலவீனத்தின் மதிப்பு கட்டுப்படுத்தப்படாமல் அதிகரித்து வருவதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சுங்கச்சாவடி முறைகேடுகள்

1954 ல் கட்டிய பாலத்திற்கு தற்போது வாகன ஓட்டிகளிடம் சுங்கச்சாவடி பணம் வசூலித்தது முதல் விதிவிலக்குகளுக்கு மாறாக வாகன ஓட்டிகளிடம் பல நூறு

# ...யை விட்டு வெளியேறு!

# இந்திய ஒற்றுமை பேரணி




திட்டத்துக்கு National Mission on Edible Oils-Oil Palm (NMEO-OP) வடகிழக்கின் 2.5 லட்சம் ஹெக்டேர் நிலம் வேண்டும். அதன் அளப்பரிய நீர்வளம் வேண்டும். பதஞ்சலி, காத்ரேஜ், ருச்சி, சஞ்சய் கொயாங்கோ உள்ளிட்ட பெரு முதலாளிகளின் எண்ணெய் வணிகம் செழிக்க பிரச்சனையின்றி பழங்குடிகளின் நிலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் வாழும் சதுப்பு நில, நீர்நிலைகளை விட்டு அவர்களைத் துரத்த வேண்டும்.

மணிப்பூர் பழங்குடிப் பெண்களை நிர்வாணமாக்கி, நடுவீதியில் இழுத்துச் சென்று, அவர்களின் தந்தை, சகோதரனைக் கொன்று குவித்த கொடூரம் வீடியோவாக வெளிவந்ததும், இரண்டரை மாதங்களாக வாய்திறக்காத பிரதமர், 'இது 140 கோடி இந்திய மக்களின் அவமானம்' என்றிருக்கிறார்.

ஆம், மதவெறி, இனவெறியைத் தூண்டிவிட்டு, பாசிச கொள்கைகள் மூலம் மக்களைப் பிளவுபடுத்தி, பெண்களை நிர்வாணமாக்கி, சிறுமிகளை எரித்து, விவசாயிகள் மீது கார் ஏற்றிக் கொலை செய்து, பழங்குடிகளை அவர்களின் நிலங்களிலிருந்து வெளியேற்றும் வெறுப்பரசியல்கும்பலை ஆட்சி அதிகாரத்தில் உட்கார வைத்திருப்பதற்காக நாம் நிச்சயம் அவமானப்படத்தான் வேண்டும்.

பா.ஜ.கவின் அரசியல் மூலதனமே வன்முறை கலவரம்தான் அதைத் தான் ராமரின் பெயரால் ரத யாத்திரை நடத்தி பாபர் மசூதியை இடித்தார்கள். குஜராத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களை படுகொலை செய்தார்கள்

தற்போது 2024 ஆம் ஆண்டுக்கு தேர்தல் வெற்றிக்காக மணிப்பூரில் பாஜக பற்ற வைத்த நெருப்பு. அரியானாவில் உத்தரகாண்டிலும் படர்ந்து கொண்டிருக்கிறது.

பாஜகவின் வெற்றிக்கு கலவரங்கள் மட்டும் போதாது என்பதற்காக பிளவுவாத அரசியலை மேலும் கூர்தீட்ட பொது சிவில் சட்டம், இந்தி மொழி திணிப்பு, சட்டமன்ற ஜனநாயக மரபுகளை சீர்குலைத்து ஆளுநருக்கு முதலமைச்சருக்கு நிகரான அதிகாரத்தை வழங்குவது அதன் மூலம் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை மிரட்டி பணிய வைப்பது போன்ற பாசிச நடவடிக்கைகளில் பாஜக ஈடுபட்டு வருவது தேசத்திற்கு பேராபத்தாகும்.

ஆகவேஇதனை எதிர்த்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் ஆகஸ்ட் 30 சென்னை சைதாப்பேட்டையில் இந்திய ஒற்றுமை பேரணி நடைபெறுகிறது.

பேரணியை சுதந்திரப் போராட்ட வீரர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் தொடங்கி வைக்கிறார். ஆகவே பேரணியில் இளைஞர்களும் மாணவர்களும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுகிறோம்.

**வெறுப்பரசியலை வேரறுப்போம்**

**இந்திய ஒற்றுமையை பாதுகாப்போம்**

**பாசிச பாஜகவே**

**ஆட்சியை விட்டு வெளியேறு!**

தொடர்புக்கு: 9791753865

கோடி ரூபாய் பகல் கொள்ளை நடத்தியதை மத்திய கணக்கு தணிக்கை அறிக்கை அம்பலப்படுத்தி உள்ளது. குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, தெலுங்கானா, ,கர்நாடகா ஆகிய ஐந்து மாநிலங்களில் 41 சுங்கச்சாவடியில் சிஏஜி சோதனை மேற்கொண்டது. அதில் செங்கல்பட்டு மாவட்டம், பரனூர் சுங்கச்சாவடியில் மட்டும் முறைகேடாக 28 கோடி வசூலித்திருப்பது தெரியவந்துள்ளது. இதுபோல 5 சுங்கச்சாவடிகளின் கணக்குகளை ஆய்வு செய்ததில் சுமார் 132.05 கோடி ரூபாய் முறைகேடாக வசூலித்திருப்பது தெரியவந்துள்ளது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல ஐந்து சுங்கச்சாவடியில் இவ்வளவு ஊழல் என்றால், நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான சுங்கச்சாவடியில் எவ்வளவு கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றிருக்கும் என்பதை அறியலாம்.

**ஆயுஷ்மான் திட்ட ஊழல்**

நாட்டில் உள்ள பத்து கோடி ஏழை எளிய மக்களுக்கு ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கு மருத்துவக் காப்பீடு வழங்குகிற திட்டம் தான் ஆயுஷ்மான் திட்டம். இந்த திட்டத்தில் பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படும். பயனாளிகளின் காப்பீட்டு அட்டையுடன் அவர்களது அலைபேசி என்னும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த திட்டத்தை ஆய்வு செய்த சி.ஏ.ஜி, 9999999999 என்ற ஒரே எண்ணுடன் சுமார் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டிருப்பதும், சிகிச்சையில் உயிரிழந்த பயனாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதாக கணக்கு காட்டியதையும் கண்டறிந்துள்ளது.

இதுபோல உதான் திட்ட ஊழல், பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்டு வருகிற இழப்புகள் மற்றும் அயோத்தி மேம்பாட்டு திட்டம் போன்றவற்றில் நடைபெற்றுள்ள ஊழல் முறைகேடுகளை அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

இதுவரை நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஊழல் கட்சிகள் என மேடைக்கு மேடை பேசி வந்த பாஜக கும்பலுக்கு மத்திய கணக்குத் தணிக்கை ஆணையத்தின் அறிக்கை எதிர்பாராத சம்மட்டி அடியாக விழுந்தது. இந்த ஊழல் முறைகேடுகள் குறித்து பிரதமர் மௌனம் கலைக்க வேண்டும் என பிரதமரை எதிர்க்கட்சிகள் உலுக்குகின்றன. தேவைப்பட்டால் மத்திய கணக்கு தணிக்கை ஆணைய அலுவலகத்திற்கு பாஜக அமலாக்கத்துறையை அனுப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

– அருண் நெடுஞ்செழியன்
தொடர்புக்கு: 9842391963

# வண்டவாளம்

## தேசியக்கொடியுடன் மசூதிக்குள் புகுந்து தாக்குதல்

அரியானா மாநிலம் பரிதாபாத்தில் பசு பாதுகாப்பு படை நடத்தி வரும் பட்டு பஜ்ரங்கி என்பவர். விஷ்வ இந்து பரிஷத் பஜ்ரங் தளம் ஆகியவற்றில் தீவிர உறுப்பினர்.

சமீபத்தில் ஹரியானாவில நூ மாவட்டத்தில் நடத்தப்பட்ட வன்முறையில் இவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்

இதை கண்டிக்கும் வகையில் விஸ்வ இந்து பரிஷத், பஜ்ரங்க தளத்தினர் சுதந்திர தினத்தன்று வாகனங்களில் தேசியக்கொடி பிடித்தவாறு, பானிபட் நகரில் அணிவகுப்பு நடத்தி 100 பேர் கொண்ட கும்பல் வழியில் இருந்த மசூதிக்குள் புகுந்து விட்டது.

மசூதிக்குள் மூன்று இஸ்லாமிய இளைஞர்கள் இருந்தனர். தாக்குதலுக்குப் பயந்து காவல்துறைக்கு தகவல் தந்தனர். சிசிடிவி கேமராவின் உதவியால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசியக் கொடியோடு தாக்குதல் நோக்கோடு மசூதிக்குள் நுழைவது தான் பாஜகவின் தேசியமா?

### நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் போது

## சொந்தக் கட்சி எம்.பி.யையே பேசவிடாமல் தடுத்த பாஜக

மணிப்பூர் விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில், மணிப்பூர் எம்பிக்களை பேசவிடாமல் பாஜக அரசு தடுத்துள்ளது

மணிப்பூரைச் சேர்ந்த பாஜக அமைச்சர் ஆர். கே. ரஞ்சன் சிங் மற்றும் நாகா மக்கள் முன்னணி எம். பி. லோக்ஹோ எஸ். போஸ் ஆகியோரை நாடாளுமன்றத்தில் பாஜகவினர் தடுத்ததாக காங்கிரஸ் மக்களவை குழு தலைவர் கௌரவ் கோகாய் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்து ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் இதை உறுதிப்படுத்தும் வகையில் நாகா நாடாளுமன்ற உறுப்பினர் லோர்ஹோ எக்ஸ்போஸ் கூறி உள்ளார்.

உள்துறை அமைச்சர் அமித் ஷா மணிப்பூர் விவகாரம் குறித்து அதிகம் பேச விருப்பதாகவும், அதனால் நீங்கள் பேச வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

மணிப்பூர் பாஜக அமைச்சர் ஆர். கே. ரஞ்சன் சிங்கிடம் இது பற்றி கேட்டேன். எனக்கும் இதேபோன்று அறிவுறுத்தி இருக்கிறார்கள் என்று கூறியதாகவும் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மணிப்பூரைச் சேர்ந்த தன் சொந்தக் கட்சி எம். பி. க்கே நாடாளுமன்றத்தில் பேசும் உரிமை மறுப்பது என்பது, ஜனநாயகத்தின் குரல் வளையை நெறிப்பதற்கு ஒப்பாகும்.

## டெல்லி மகளிர் ஆணையம் ஸ்மிருதி ராணி மீது கடும் சாடல்



மணிப்பூரில் பெண்கள் மானபங்கம் செய்து இழுத்துச் செல்லப்பட்ட போதும், பில்கிஸ் பானு பாலியல் தாக்குதல் வழக்கில் சுதந்திர தினத்தன்று விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் குறித்தும், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி கோபப்படாமல் இருந்தது ஆச்சரியம் அளிக்கிறது என்று டெல்லி மகளிர் ஆணையத் தலைவர் சுவாதி மாலி வால் கடும் விமர்சனம் செய்துள்ளார்.

மக்களவையில் தனக்கு பின் வரிசையில் மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் புகாருக்கு உள்ளான பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்ட பிரிஜ் பூஷன் அமர்ந்திருந்த நிலையில் ஸ்மிருதி ராணிக்கு கோபம் எங்கே போனது?

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாலியல் வன்கொடுமைகள் குறித்த செய்திகள் தொடர்ச்சியாக வரும்போதும்ஸ்மிருதி ராணிக்கு கோபம் வரவில்லை. ஒருவேளை கோபப்பட வேண்டிய விஷயங்களுக்கு உரிய முன்னுரிமை அளிக்க ஸ்மிருதி ராணிக்கு தெரியவில்லை என்று நினைக்கிறேன் என்றும் மகளிர் ஆணையத் தலைவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஸ்மிருதி ராணிக்கு இதெல்லாம் உரைக்குமா?

## ஜெய் ஸ்ரீ ராம் என்ற கூச்சலோடு இஸ்லாமிய இளைஞர் மீது தாக்குதல்!

மும்பை பாந்திரா ரயில் நிலையத்தில் இஸ்லாமிய இளைஞர் ஒருவரை ஜெய் ஸ்ரீ ராம் என்று கூச்சலிட்டபடி ஒரு கும்பல் தாக்கிய வீடியோ வைரலாகி உள்ளது.

அந்த இஸ்லாமிய இளைஞர் ஒரு இந்து பெண்ணுடன் சேர்ந்து வந்ததாக கூறி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இளைஞரின் தலை முடியை பிடித்து இழுத்துச் சென்று, ரயில் நிலையத்தின் வெளியில் கொண்டு வந்து கடுமையாக தாக்கியுள்ளனர். தாக்குதல் சம்பவத்தை வீடியோவாக எடுத்து ஜெய் ஸ்ரீ ராம் என்று கூச்சலிட்டனர்.

அந்தப் பெண்ணுக்கு வெறும் 16 வயது தான் ஆகிறது. எனவே, நாங்கள் மைனர் பெண்ணை காப்பாற்றியுள்ளோம் என்று கூச்சல் போட்டுள்ளனர்.

பந்தரா நகர் காவல் நிலையம் வழக்கோ, விசாரணையோ, கைது நடவடிக்கையோ எதுவும் எடுக்கவில்லை.

தாக்குதல் நடத்தியதும், தண்டனையிலிருந்து தப்பச் செய்வதும் சங்கி கும்பல்கள் தான்!

# வண்டவாளம்

## தமிழ்நாட்டு எஸ்சி, எஸ்டி நலத்துறைக்கு ஒன்றிய அரசு நிதி குறைப்பு



ஒன்றிய அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 3019 கோடியே 65 லட்சம் வரை ஒதுக்கியது. ஒவ்வொரு ஆண்டும் இந்த நிதியின் அளவு குறைக்கப்பட்டு கடைசியாக 2022 – 2023 இது ஆண்டுக்கு 159.78 கோடிகள் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. மதுரையைச் சார்ந்த சமூக ஆர்வலர் கார்த்திக் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் இதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார். ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து கூடுதல் தொகையை வாங்கித்தர பாஜக அண்ணாமலை முன் வருவாரா?

## பாஜக ஆட்சியில் கடன் 60% அதிகரிப்பு




கடன் வாங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியிருப்பதற்கு அமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

உற்பத்தி திறனை வைத்து தான் அதனை மதிப்பிட வேண்டும். 2014– 2021 வரை அதிமுக ஆட்சிதான். தமிழகத்தின் கடன் சுமைக்கு காரணம், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சென்று விட்ட பின்பு, ஆட்சியாளர்கள் நிதி ஆதாரத்தை முறையாக கையாளத் தெரியாமல் கீழே இறங்கிவிட்டது. உற்பத்தித்திறன் முன்னேறாமல் 60% கடன் வாங்கி விட்டனர் .

திமுக ஆட்சிக்கு வந்த பின்பு நிதி நிலையை அதிகரித்துள்ளோம். தமிழ்நாடு அரசின் கடன் ஜி. டி. பி. யில் 27 சதம் தான். ஆனால் பாஜக ஒன்றிய அரசின் கடன் ஜி. டி. பி. யில் 60 சதம் என்று உள்ளது. இது பிஜேபி ஆட்சிக்கு வந்த பின் ஏற்பட்டதாகும்

யாருடைய மேலாண்மை பற்றி யார் கருத்து சொல்வது? என்று பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் காட்டமாக கூறியுள்ளார்.


## நீதிபதிகளுக்கே புதிய சட்ட மசோதா ஆபத்தானது

பாரதிய நியாய சம்ஹிதா சட்ட மசோதா அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. நீதிபதிகளுக்கு ஆபத்தானது என்று மூத்த வழக்கறிஞரும், முன்னாள் சட்ட அமைச்சரான கபில் சிபில் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சி கால சட்டங்களை நீக்குவதாக கூறும் பாஜக அரசு. தற்போது கொண்டு வரும் புதிய சட்டம் நாட்டில் சர்வாதிகாரத்தை திணிக்க விரும்புகிறது. இந்தச் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சர்கள், தலைமை கணக்கு அதிகாரிகள், உயர் அரசு பணியாளர்கள் அனைவருக்கும் எதிரான நடவடிக்கையாகும். இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் எதிர்காலத்தில் நாடு பெரும் ஆபத்திற்கு உள்ளாகும். ஆங்கிலேயர்கள் கூட இத்தகைய முறைகளை கையாள முன் வரவில்லை.

இது காலனி ஆட்சி சட்டத்தை விட கடுமையான சட்டம் என்று கபில் சிபல் கோடிட்டு காட்டியுள்ளார்.

## அரசு அதிகாரிகள் காவல்துறையினர் சமூக வலைதள குழுக்களில் இருந்து வெளியேற வேண்டுமாம்



மணிப்பூரில் நடைபெற்ற வன்முறையாள் இனவெறி கிளப்பப்பட்டு அரசு அதிகாரிகள், காவல்துறையினர் மத்தியில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன

இந்த நிலையில் அரசு அதிகாரிகள், காவல்துறையினர் யாரும் சமூக வலைதள குழுக்களில் இருக்கக் கூடாது என்று மணிப்பூர் மாநில அரசு கூறி உள்ளது,

மணிப்பூர் கலவரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் அறிக்கையை மணிப்பூர் அரசு தாக்கல் செய்துள்ளது. முகநூல், வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதள குழுக்களில் பிரிவினைவாதம், தேசவிரோதம் மற்றும் வகுப்புவாதத்தை அதிகரிக்கும் செயல்களில் ஈடுபடுவர் என்பதால் அரசு அதிகாரிகள், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இந்தக் குழுவில் இருந்து வெளியேற வேண்டும் என உள்துறை ஆணையர் டி. ரஞ்சித் சிங் கூறி உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது முன்பே செய்திருக்க வேண்டிய ஒன்று. இதுபோன்று செயல்படுபவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூக வலைதள குழுக்களில் இருந்து வெளியே வந்து விட்டால் மட்டும் போதாது.

மத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியின்

## வாயிற்கதவில் மனிதக் கழிவு பூசப்பட்டதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை

திருத்தணி மத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் வாயிற்கதவில் மனிதக் கழிவு பூசப்பட்டதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை அடுத்த மத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி வாயிற்கதவில் மனித கழிவு பூசப்பட்ட செய்தி அதிர்ச்சியோடு அறுவெறுப்பு ஊட்டுகிறது. நாகரிகமற்ற இச்செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிப்பதோடு, இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவர்களை கண்டறிந்து சட்டப்படி அவர்களை தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.

வேங்கைவயல் குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட அதிர்வுச் சூழலில், மத்தூர் பள்ளியில் மனித கழிவு பூசப்பட்டது மேலும் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. பள்ளிக்கூடத்தை ஆய்வு செய்த போது பல இடங்களில் மனித கழிவு சிதறி கிடப்பதும், மது பாட்டில்கள் பரவிக் கிடப்பதும் தெரியவருகிறது. அத்துடன் உரிய சுற்றுச்சுவர் இல்லாததால் இரவு நேரங்களில் சமூக விரோத செயல்களும் நடைபெறுவதாக வரும் செய்திகள் கவலையளிக்கிறது.

ஒரு பள்ளிக்கூடத்திற்கு தேவையான குறைந்தபட்ச உட்கட்டமைப்புகள் இல்லாதது குறித்து ஏற்கனவே மாணவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இருப்பினும் இதன் மீது உரிய கவனம் இல்லாதது கண்டிக்கத்தக்கது.

தமிழக அரசு பள்ளிக்கல்விக்காக, பள்ளிக்கூடங்களுக்காக பல நல்ல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத் திட்டம், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (சிஎஸ்ஐடிஎஸ்) என திட்டங்களை செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு, வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்தல் குறித்த அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும்(எஸ்எம்சி)பள்ளிமேலாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டு அதில் உள்கட்டமைப்புக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியர், ஆசிரியர், பெற்றோர் இவர்களோடு ஊராட்சிமன்ற உறுப்பினர் இணைந்து பள்ளி உள்கட்டமைப்புக்கு செயலாற்ற வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஏற்பாடுகள் இருப்பினும், எத்தகைய முயற்சிகளும் மத்தூர் பள்ளியில் ஏற்படுத்தாதது ஏற்புடையதல்ல.

திருவள்ளூர் முதன்மை கல்வி அலுவலகம், மாநில கல்வி அலுவலகம் உடனடி தலையீடு செய்ய வேண்டும். மேலும் தமிழ்நாடு முழுவதும் பள்ளிக்கூடங்களை ஆய்வு செய்ய பள்ளிக் கல்வித்துறை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டிலேயே கல்வித்துறையில் சிறந்தோங்கும் தமிழ்நாட்டின் "கல்வி நற்கூறுகளை" மேலும் முன்னெடுக்க வேண்டுகிறோம் என கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு தீர்மானங்கள்

## அன்ரிசர்வ், ஸ்லீப்பர் ரயில் பெட்டிகளை குறைக்காதீர்!



**சென்ற இதழ் தொடர்ச்சி**

**14,15,16,17 ஆகஸ்ட் 2023 தேதிகளில் சேலம் காட்டூரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்ச்சி வருமாறு:**

### முன்பதிவில்லாத ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரித்திடுக! ஸ்லீப்பர் பெட்டிகளின் எண்ணிக்கையை குறைக்காதீர்!

தமிழ்நாட்டில் இயக்கப்படும் ரயில்களில் குளிரூட்டப்பட்ட ரயில் பெட்டிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது. இதன் காரணமாக சாதாரண படுக்கை வசதி கொண்ட பெட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகிறது. முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு, அசையக்கூட முடியாத நெரிசலில் மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

முன்பதிவு இல்லாத பெட்டிகளில் 199 கி.மீ. வரையில் பயணம் செய்பவர்கள், பயணம் துவங்குவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பு பயணச்சீட்டு எடுத்திருந்ததால் அது செல்லாது என்ற புதிய விதி கொண்டு வரப்பட்டுள்ளது.

முன்பதிவிலும்கூட, ரயில் புறப்படும் நேரம் நெருங்க நெருங்க, கட்டணம் அதிகரிக்கும்வகையில்சிலரயில்களில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வழக்கமான கட்டணத்தை விட மூன்று மடங்குக்கும் மேலாக அந்த கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவசரமாக பயணிக்க வேண்டியவர்கள், முன்பதிவு செய்ய கூடுதல் கட்டணத்தோடு தட்கல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது ப்ரீமியம் தட்கல் என்ற முறை அமலாக்கப்பட்டு கூடுதல் கட்டணம் மூன்று மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதோடு, பயண நேரம் நெருங்க நெருங்க இன்னும் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

முன்பதிவு செய்தவர்கள் கடைசி நேரத்தில் பயணம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு பயணச்சீட்டை ரத்து செய்யும்போது, முன்பு ரயில் புறப்பட்ட சென்றபிறகும்கூட 50 சதவீதகட்டணம் திரும்ப கிடைக்கும் முறை இருந்தது. இப்போது ரயில் புறப்படுவதற்கு 4 மணி நேரத்தை விடக் குறைவாக இருந்தால் கட்டணம் திரும்பத் தரப்படாது என்ற முறை ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, அதற்கு முன் ரத்து செய்தாலும் 25% கட்டணம் மட்டுமே திரும்பத் தரப்படுகிறது. அதற்கும் ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படுவது அநியாயமானதாகும்.

மூத்த குடிமக்களுக்கான கட்டணச் சலுகை கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டது. திரும்ப வழங்கப்படவில்லை. வயது முதிர்ந்த பயணிகளின் கட்டணச் சலுகை மறுக்கப்பட்டதன் காரணமாக, சென்ற ஆண்டில் ரூ. 1500 கோடி ரயில்வேக்கு கூடுதல் வருவாய் என அரசு தெரிவித்திருப்பது முரண்நகையாகும்.

பயணச் சீட்டின் மூலம் வருவாய் பெறுவது மட்டுமல்லாமல், சாதாரண மக்களிடம் இருந்து வெவ்வேறு வடிவங்களில் ரயில்வே பணத்தை உறிஞ்சுகிற விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றால் சாதாரண மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே ஒவ்வொரு ரயிலிலும் நான்கு முன்பதிவில்லாத பெட்டிகளை இணைக்கவேண்டும்என்றும், டிக்கெட் எடுத்த மூன்று மணி நேரத்துக்குள் பயணம் செய்ய வேண்டும் என்ற முறையை கைவிட வேண்டும் என்றும், குளிர்சாதன பெட்டிகளை கூட்டுவதற்காக சாதாரண படுக்கை வசதி கொண்ட பெட்டிகளை குறைக்கக் கூடாது என்றும், மூத்த குடி மக்களுக்கு கட்டண சலுகையையும், குழந்தைகளுக்கான அரை கட்டணத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்றும் ரயில்வே துறையையும், ஒன்றிய அரசையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

### கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு மே தின பூங்காவில் சிலை அமைத்திடுக!

சாமானிய மக்களின் வாழ்க்கைத் துயரங்களையும், வேட்கைகளையும், துணிவையும், வாழ்வின் அழகையும் தன் வாழ்நாள் முழுக்க பாடி வந்த கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு, 2023 செப்டம்பர் 21 அன்று தொடங்குகிறது.

உழைப்பாளர்களின் உரிமை திருநாளான மே தினத்தைப் பற்றி தமிழில் முதலில் பாடியவர் கவிஞர் தமிழ்ஒளி அவர்கள்தான்.

அவரது நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாகக் கொண்டாடவும், அவரை சிறப்பிக்கும் வகையில், சென்னை, மே தினப் பூங்காவில் அவருக்கு சிலை அமைக்கவும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழுக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### மாவட்ட, ஒன்றிய ஊராட்சி உறுப்பினர்களுக்கும் மாத ஊதியம் வழங்கிடுக!

பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையிலும் தேவைகளிலும் பெரும் பங்காற்றுவது உள்ளாட்சி அமைப்புகள் ஆகும். திராவிட முன்னேற்றக் கழக தலைமையில் தமிழ்நாடு ஆட்சி அமைந்த பிறகு, உள்ளாட்சி தேர்தலை நடத்தி இருக்கிறது.

நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குவதைப் போல உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஊதியம் வழங்க தமிழ்நாடு அரசு முன்வந்தது வரவேற்கத்தக்கதாகும்.

மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சி தலைவர், துணைத் தலைவர், பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர், மாமன்றம், நகராட்சி, ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாதம் ஊதியம் வழங்குவதாக அண்மையில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

மாவட்ட ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஆகியோரும் உள்ளாட்சி பணி புரியும் மக்கள் பிரதிநிதிகளே ஆவர். அவர்களுக்கும்மாத ஊதியம்வழங்கிட தமிழ்நாடு அரசு பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் கேட்டுக்கொள்கிறது

### கொண்டலாம்பட்டி சீலநாயக்கன்பட்டி பைபாஸ் மேம்பாலம் கட்டுக!

சேலம், கொண்டலாம்பட்டி பைபாஸ் முதல் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் வழியாகச் செல்லும் சாலை தேசிய நெடுஞ்சாலை ஆகும். இதன் வழியாக சராசரியாக நிமிடத்திற்கு 90 வாகனங்கள் செல்கின்றன. நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. மரண விபத்துக்கள் நேர்கின்றன. எனவே கொண்டலாம்பட்டி சீலநாயக்கன்பட்டி பைபாஸ் வரை மேம்பாலம் அமைப்பது இன்றியமையாததாகும். இதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்ததோடு, இயக்கங்களையும் நடத்தி இருக்கிறது. இதன் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட மேம்பாலம் கட்டுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கேட்டுக் கொள்கிறது. மேலும் சீலநாயக்கன்பட்டி பைபாஸிலிருந்து எருமாபாளையம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தை விரிவுபடுத்துமாறும் கேட்டுக் கொள்கிறது.

### மாமாங்கத்தில் மேம்பாலக் கட்டுமானத்தைத் தொடங்குக!

பெங்களூரில் இருந்து கோவை வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், சேலம் மாநகர எல்லையில் மாமாங்கம் அருகே மேம்பாலம் அமைக்க சென்ற ஆட்சிக் காலத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால் அதனைத் தொடர்ந்து மேல்நடவடிக்கை இல்லை.

மாமாங்கம் சிக்னல் அருகேயும், இந்தப் பகுதியிலும் உயிரிழப்பு உள்ளிட்ட விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. எனவே மாமாங்கம் பகுதியில் உரிய வகையில் மேம்பாலம் அமைக்க அவசர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழுக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

---

2019 – 2021 மோடி ஆட்சியில்

## 13.13 லட்சம் சிறுமிகள், பெண்கள் மாயம்




2019 முதல் 2021 வரை மட்டும் மோடி ஆட்சியில் 13.13 லட்சம் சிறுமிகள், பெண்கள் காணாமல் போய் உள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.


நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அமைச்சகத்தின் விவரங்கள் படி நாடு முழுவதும் 2019 2021 வரை 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 10,61648 பேரும், அதற்கு குறைவான வயதுடைய பெண்கள் 2,51,430 பேரும் காணவில்லை.

தலைநகர் டெல்லியில் 61,054 பெண்களும், 22,919 சிறுமிகளும், ஜம்மு காஷ்மீரில் 8,617 பெண்களும், 1,148 சிறுமிகளும், மத்திய பிரதேசத்தில் 1,60,180 பெண்களும்,3234 சிறுமிகளும், இவ்வாறு நாடு முழுவதிலும் லட்சக்கணக்கான பெண்களும், சிறுமிகளும் காணாமல் போய் உள்ளனர்.

ஆனால் இந்த உண்மைகளை மூடி மறைத்து, நாடாளுமன்றத்தில் பெண்களின் பாதுகாப்பிற்காக பல முயற்சிகள் எடுத்துள்ளதாக மோடி அரசு பொய்யாக அறிவிக்கிறது!

இளம் வயதில் மனநலம் பாதிக்கப்பட்டோர் இந்தியாவில் அதிகம்!

## உ.பி.யில் ஆதித்யநாத் ஆட்சியில் 183 என்கவுண்டர் படுகொலைகள்!



உ.பி. யில் முன்னாள் மக்களவை எம்.பி. அதீக் அகமது மற்றும் அவரது சகோதரர் அசரப் ஆகியோரது கொலை வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் எஸ்.ரவீந்திர பட் மற்றும் அரவிந்த் குமார் ஆகியோர் அமர்வில் விவாதத்திற்கு வந்தது.

அதீக் அகமதுவின் பாதுகாப்புக்கு 5 முதல்10 பேர் வரை இருக்கும்போது, யாரோ சிலர் வந்து எப்படி சுட்டுக் கொள்ள முடியும்? இது எப்படி நடந்தது? இந்த விவகாரத்தில் யாரோ உடந்தையாக உள்ளனர்! என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

2017 க்கு பின்பு யோகி ஆதித்தநாத் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு, நடைபெற்ற 183 என்கவுண்டர்கள் தொடர்பாக ஆறு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதற்கு மேலும் ஆதித்யநாத் உ.பி யின் முதல்வராக நீடிக்கலாமா? அதற்கான அருகதை அவருக்கு உண்டா?"

## மணிப்பூரில் மேலும் ஒரு பெண் பாலியல் பலாத்காரம்!



மணிப்பூரில் மூன்று மாத காலத்திற்கு மேலாக நடந்து வரும் வன்முறையில் பழங்குடி பெண்கள் இருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக செய்தி வைரலாக பரவியது.

இந்தியாவின் அரசியல் மானம் அம்மணமானது.

இந்த நிலையில் மேலும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளானதாக செய்தி வெளிவந்து அதிர்ச்சி அளிக்கிறது.

வன்முறையின்போது உயிர் பிழைக்க ஓடும்போது, திடீரென கால் இடறி கீழே விழுந்து விட்டேன். என்னுடன் ஓடி வந்த மைத்துனியிடம் குழந்தைகளை ஒப்படைத்து ஓடிவிடும்படி சொன்னேன். அவள் ஓடிவிட்டாள், நான் மாட்டிக் கொண்டேன்.

ஆறு பேர் கொண்ட கும்பல் என்னை தரக் குறைவாக பேசி, பாலியல் வன்கொடுமை செய்தனர். நான் என் குடும்பத்தின் நிலை கருதி வெளியில் சொல்லாமல் இருந்தேன். நான் நீதி வேண்டி குரல் கொடுத்திருக்கிறேன் என்று கூறுகிறார் அந்த 37 வயது அபலைப் பெண். இதுபோன்று இன்னும் எத்தனை பாலியல் பலாத்காரங்கள் புதைந்து கிடைக்கிறதோ?

## புதுக்கோட்டையில் ஜனசக்தி சந்தா வழங்கும் விழா



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட குழு கூட்டம் மற்றும் ஜனசக்தி சந்தா வழங்கும் விழா புதுக்கோட்டை மாவட்ட துணை செயலாளர் ஏ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம். எக்ஸ் எம்எல்ஏ, மாநில நிர்வாக குழு உறுப்பினர் க. மாரிமுத்து எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் த. செங்கோடன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செப்டம்பர் 12, 13, 14, ஆகிய தேதிகளில் நடைபெறும் மாநிலம் தழுவிய போராட்டத்தில் தோழர்கள் திரளாக கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 500 சந்தாவில் 250 சந்தா வழங்கப்பட்டது.

### ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில்
## சுதந்திர தின கொடி ஏற்றம்




தருமபுரி மாவட்ட ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் 77வது சுதந்திர தின கொடி ஏற்றும் நிகழ்ச்சி தொலைபேசி நிலையம் அருகில் நடைபெற்றது.

ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர் ஆர். சுதர்சனன் தேசிய கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணை செயலாளர் எம். மாதேஸ்வரன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே. மணி, மாவட்ட துணை தலைவர் ஏ. முருகேசன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என். மனோகரன், ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மதுரை ஏஐடியுசி அமைப்புசாரா சங்க 28 வது ஆண்டு பேரவை

மதுரை திருப்பரங்குன்றம் ஏஐடியுசி தெரு வியாபாரிகள் சங்கம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் சங்கத்தின் 28 ம் ஆண்டு பேரவை சங்கத் தலைவர் பா.காளிதாஸ் தலைமையில் நடைபெற்றது. சங்க துணைத் தலைவர்கள் மாரி, முத்துச்சாமி மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கப் பொருளாளர் முத்துப்பாண்டி வரவேற்புரை வழங்கினார்.

மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன் சிறப்புரை ஆற்றினார். சிபிஐ புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் சேது மற்றும் கௌரவத் தலைவர் தினகரமோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முடிவில் சங்கப் பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார். இப்பேரவையில் தலைவராக காளிதாஸ், பொதுச் செயலாளராக பாலகிருஷ்ணன் மற்றும் பொருளாளராக முத்துப்பாண்டி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### வினாடி - வினா விடைகள்

1. லூனா – 16 (1970 செப்டம்பர் 21)
2. சந்திரயான் – 1
3. லூனா – 10 (ரஷ்யா)
4. யூரி ககாரின் (ரஷ்யா)
5. அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆர்ம்ஸ்ட்ராங், அதைத்தொடர்ந்து ஆல்ட்ரின் (1969 ஜூலை 21)
6. பேரரசன் அலெக்சாண்டர் – 3

## ஈரோடு புத்தகத் திருவிழா - 2023 நிறைவு




தமிழ்நாடு அரசும், மக்கள் சிந்தனைப் பேரவையும் இணைந்து நடத்திய 'ஈரோடு புத்தகத் திருவிழா 2023' ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானத்தில் 04 08 2023 அன்று தொடங்கி 15.08.2023 ஆம் தேதி நிறைவடைந்தது. இதன் நிறைவு விழாவில், தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி. சி. துரைசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு அந்நிறுவனங்களின் இயக்குநர் சாந்திதுரைசாமி முன்னிலை வகித்தார். ஈரோடு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் கு.ஜவகர், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் பு.ஜானகி இரவீந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் ஜே.அ.குழந்தைராஜன், பபாசி தலைவர் எஸ்.வைரவன், மாவட்ட நூலக அலுவலர் இரா.யுவராஜ், சிக்கய்ய நாயக்கர் கல்லூரி முதல்வர் எஸ்.மனோகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் அறிமுகவுரை நிகழ்த்தினார். நிறைவில், மக்கள் சிந்தனைப் பேரவையின் துணைத்தலைவர் கோ. விஜயராமலிங்கம் நன்றியுரையாற்றினார்.

## திருச்சி ஜி.ஆர்.தினேஷ்குமாருக்கு சிறந்த இளைஞர் விருது



அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில துணைச் செயலாளர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி. ஆர். தினேஷ்குமார், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் துறையின் சார்பில் அளிக்கப்படும் சிறந்த இளைஞர் 2023 விருதுக்காக தேர்வு செய்யப்பட்டு, சுதந்திர தினத்தன்று முதலமைச்சரிடம் இருந்து விருதை பெற்றார்.

### மாணவர் பெருமன்றத்தின் சார்பில் 5 மண்டலங்களில்
## பொது பாடத்திட்டத்திற்கு எதிராக கருத்தரங்கு!

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில குழு கூட்டம் சேலம் மாவட்டத்தில் மாநிலத் தலைவர் சீ. தினேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க. சந்தானம், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க. பாரதி, மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் பா.தினேஷ், தேசிய குழு உறுப்பினர் மௌ.குணசேகரன், மாநில பொருளாளர் க.இப்ராகிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் 5 மண்டலங்களில் அனைத்து கல்லூரிகளுக்கும் ஒரே பாடத்திட்டத்தை கொண்டு வரும் உயர்கல்வி துறையின் முடிவுக்கு எதிராக கருத்தரங்கு நடத்துவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆகஸ்ட் 30 ஆம் தேதி சென்னையில் நடைபெறும் பேரணி பொதுக்கூட்டத்திற்கு 3000 மாணவர்களை திரட்டுவதென முடிவு செய்யப்பட்டது. செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 1 வரை பீகார் மாநிலம் பெகுஷ்ராய்யில் நடைபெறும் அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்வதற்கான பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும் அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தை கொண்டு வரும் உயர்கல்வித்துறையின் முடிவுக்கு எதிராகவும், நாங்குநேரி பகுதியில் சாதிய வெறியர்களால் தாக்கப்பட்ட மாணவனுக்கும், மாணவருடைய குடும்பத்திற்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வாயில் முன்பு, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சேலம் மாவட்ட செயலாளர் நேதாஜி தலைமையில், நாங்குநேரி சாதிய கொடுமையைக் கண்டித்துப் போராட்டம் நடைபெற்றது.

## விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்க கோரி பாபநாசத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம்




அரையபுரம் தட்டுமால் படுகை இனாம் விவசாயிகள் சங்கம் சார்பில், அரையபுரம் தட்டுமால் படுகை கிராம விவசாயிகளுக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், சாகுபடிச் செய்யும் விவசாயிகளுக்கு ராயத்து வாரியாக மாற்றம் செய்து காலதாமதம் இன்றி நிலப் பட்டா வழங்கக் கோரி, தொடர் உண்ணா விரதப் போராட்டம் பாபநாசம் அண்ணா சிலை அருகில் நடந்தது. விவசாய சங்க மாவட்டச் செயலாளர் தர்மராஜ் தலைமை வகித்தார். இதில் ஏ.ஐ.டி.யூ.சி மாநிலச் செயலர் தில்லைவனம், முன்னாள் மாவட்ட துணைச் செயலர் பரமசிவம், சிபிஐ ஒன்றியச் செயலர் சேகர், விவசாய சங்க ஒன்றியத் தலைவர் பொய்யாமொழி உட்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

## பத்திர பதிவு அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் ஒன்றியம் மேலத்தாழனூர் கிராமம். கண்ணன் ராஜாம்பாள் அவர்களுக்கு சொந்தமான நிலத்தை ஆதாயம் பெற்றுக் கொண்டு தவறாக பத்திர பதிவு செய்த திருக்கோவிலூர் சார்பதிவாளர் வேல்முருகன் மீது நடவடிக்கை எடுக்க கோரி கிராம மக்களுடன் இணைந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருக்கோவிலூர் ஒன்றிய குழு சார்பில். சார் பதிவாளர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் கே. ரவி தலைமையில், மாவட்டச் செயலாளர் கே. இராமசாமி, மாவட்ட நிர்வாக குழு மு. கலியபெருமாள், நகர குழு பி. எச். கே. பஷீர் அகமது, நகர செயலாளர் பி. எச். கிப்ஸ், ஏஐஒய்எஃப் மாவட்ட செயலாளர் எஸ். விஜய் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மாதர் சங்க திருச்சி மாநகர் மாவட்ட 2வது மாநாடு




இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் திருச்சி மாநகர் மாவட்ட 2வதுமாநாடு உறையூரில் எஸ்.பார்வதி, கே. ஆயிஷா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் வை. புஷ்பம் மாதர் சங்க கொடியினை ஏற்றி வைத்தார். மாநிலத் தலைவர் பி. பத்மாவதி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, கட்டுமான சங்க மாவட்ட தலைவர் எம். ஆர். முருகன், மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் க. இப்ராகிம், இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் எம். செல்வகுமார், மாதர் சங்க மாநிலத் துணைச் செயலாளர் நிஷா சத்யன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

மாவட்ட தலைவராக எஸ். பார்வதி, செயலாளராக ஏ. அஞ்சுகம், பொருளாளராக சுமதி, துணைத் தலைவராக க. ஆயிஷா, துணை செயலாளராக முத்து லட்சுமி ஆகியோர் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். செல்வராஜ் மாநாட்டினை முடித்து வைத்து உரையாற்றினார்.

# 77வது சுதந்திர தினம் கொண்டாட்டம்



**வடசென்னை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக 77வது சுதந்திர தினத்தன்று, இந்துத்துவா சக்திகளிடமிருந்து இந்தியாவை பாதுகாப்போம் என்கிற முழக்கத்துடன், 100 அடி நீளம் கொண்ட தேசிய கொடியை உயர்த்தி பிடித்து உறுதியேற்பு நிகழ்வு மாவட்ட குழு உறுப்பினர் தோழர் ஆர். பாளையம் தலைமையில் நடைபெற்றது.

விடுதலை போராட்ட வீரர், தகைசால் தமிழர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் இரா. நல்லகண்ணு, மூத்த தோழர் எம். எஸ். மூர்த்தி, கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த. கு. வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணை செயலாளர்கள் ஜீ. சுப்ரமணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி. கருணாகரன், த. செண்பகம், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ. இராமலிங்கம், ஜி. இராஜசேகர், எம். நத்தானியேல், ஜி. சீனிவாசலு, எஸ். நாகராஜ், மாமன்ற உறுப்பினர் எம். ரேணுகா மற்றும் பெண்கள், குழந்தைகள் என திரளாக பங்கேற்றனர்.

**திண்டுக்கல்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் 77 வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் பி. வெள்ளைச்சாமி கொடியேற்றி தலைமை உரையாற்றினார். வழக்கறிஞர் சிவக்குமார், சந்திரமோகன், பி. கிருஷ்ணசாமி ஆகியோர் சுதந்திர தின உரையாற்றினார்கள். மாவட்ட பொருளாளர் பி. ஆர். சுதந்திரதேவி உறுதிமொழி வாசித்தார்கள். மாவட்ட செயலாளர் ஏ. பி. மணிகண்டன், மாநகர செயலாளர் ராஜாங்கம், ஏஐடியுசி மாவட்ட தலைவர் பாலன், மணிவேல், கலை இலக்கிய பெருமன்ற மாவட்டச் செயலாளர் பிரபாகரன் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்

**மணப்பாறை:** மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில்,நகர்மன்ற வாளகத்தில் பெருமாபட்டி நடுநிலை பள்ளியில் 77 ஆண்டு சுதந்திர தின கொடி ஏற்று விழா நடைபெற்றது

சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வாளகத்தில் தேசிய கொடியை சட்ட மன்ற உறுப்பினர் ப.அப்துல்சாமது கொடி ஏற்றி வைத்தார்

ஒன்றிய பொரு தலைவர் அமிர்தவல்லி ராமசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, நல்லுச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிநகர்மன்ற உறுப்பினர்கள் தங்கமணி மனோன்மணி ஆகியோர் வெற்றி தனி பயிற்ச்சி கல்லூரியில் கொடி ஏற்றி வைத்து சுதந்திர தின வாழ்த்து தெரிவித்தனர்

நடுநிலை பள்ளியில் பள்ளிநிர்வாகி வெள்ளகண்ணு தலைமையில் புத்தாநத்தம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மாரநாடன் சுதந்திர தின கொடி ஏற்றிவைத்தார்.

ஜனசக்தி உசேன் மாணவிகளை பாராட்டி சிறப்புரை நிகழ்தினார்.

## வாடியூர் அர்ஜுனா நதிக்கு செல்ல விடாமல் ஆக்கிரமிப்பு

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்டம் வாடியூர் கிராமம் அருகிலுள்ள அர்ஜுனா நதிக்கு செல்லும் பாதையை அடைத்து வேலிபோட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது . இதனால் ஆற்றுக்கு போகமுடியாமலும், அங்கம் கரைத்தல் மற்றும் முளைப்பாரி கரைத்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடத்த முடியவில்லை. ஆக்கிரமிப்பை அகற்ற வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்திற்கு பலமுறை மனு அளிக்கப்பட்டது . எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வாடியூர் தலைவர் வேண்டியபெருமாள் தலைமை வகித்தார். நாட்டாமை வேல்முருகன், சிபிஐ கிளை செயலாளர் கல்யாணசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாநில உறுப்பினர் தி. இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், தலைவாஇ மாவட்ட செயலாளர் எஸ். பழனிக்குமார் ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி பேசினார்கள் . விருதுநகர் ஒன்றிய செயலாளர் சக்கணன் , தலைவாஇ முருகேசன், மாவட்ட குழு இராஜேந்திரன் , மாதர்சங்க மாரீஸ்வரி, இளைஞர் மன்ற வடிவேல்முருகன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். ஆர்ப்பாட்ட முடிவில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுக்கப்பட்டது. வாடியூர் மக்கள் போராட்டம் முடிந்து கிராமத்திற்கு திரும்பியபோது ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டிருந்தது. வாடியூர் மக்கள் மகிழ்சியடைந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றியை தெரிவித்தார்கள்.

# மணிப்பூரை பாதுகாப்போம்; மாதர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்



இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மத்தியசென்னை மாவட்டம், எழும்பூர் தொகுதி, தட்டாங்குளம் பகுதியில் மணிப்பூரை பாதுகாப்போம்,பெண்கள் மீதான பாலியல் வன்முறையை தடுத்து நிறுத்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கு என்று மெழுகு வர்த்தி ஏந்தி கண்டன இயக்கம் மாவட்ட தலைவர் நா. மாணிக்கவள்ளி தலைமையில் நடைபெற்றது. இதில் மு.கவிதா, பி. மஞ்சு, ர. குபேரகுந்தவி மற்றும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கர்நாடகா தமிழகத்திற்கு வழங்க வேண்டிய

# காவிரி நீரை உடனடியாக வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

கர்நாடகா அரசு மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதை தடுத்திடவும், ஜுலை மாதம் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய காவிரி நீரை உடனடியாக பெற்று தரக் கோரியும் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தலைமை தபால் அலுவலகம் முற்றுகை போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன் தலைமையேற்று நடத்தினார். கட்சியின் மாநில தலைவர்களில் ஒருவரும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினருமான கோ. பழனிச்சாமி கண்டன உரை நிகழ்த்தினார். தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ. பாஸ்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி. வி. சந்திரராமன், ஒன்றிய செயலாளர் வி. ஜவஹர், நகர செயலாளர் டி. பி. சுந்தர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

## நாங்குநேரி மாணவர் தாக்கப்பட்டதை கண்டித்து

# மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்



தமிழக மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைக்கக்கூடிய நீட் தேர்வுக்கு ஆதரவாக செயல்படும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்தும், நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவன் சின்னதுரையை தாக்கிய சாதிய வன்மத்தை கண்டித்தும் மற்றும் கல்வி நிலையங்கள் சாதிய பாகுபாட்டை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் எடமலைப்பட்டி புதூர் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் மு. நந்தகுமார் தலைமை வகித்தார். இதில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில செயலாளர் எம். செல்வராஜ், தமிழ்நாடு மாநில பொருளாளர் க. இப்ராகிம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் அ. அஞ்சுகம், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ஆர். முருகேசன் மற்றும் மாணவர்கள் பெருமன்றத்தின் மாவட்ட துணை செயலாளர் மௌ. ஜெய்லானி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 128. ஓடியகாலம்

**ஒடிய காலத்தின் ஓங்கியதே ஓடுமக்**
**காஅலம் உன்னி உணர்.**

இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நிகழ் காலம், ஓடிப்போய்விட்ட இறந்தகாலத்தினும் சிறந்தது. ஆகவே சிந்தித்து உணர்ந்து செயல்படுக.

**ஓடிய காலம் உயர்ந்ததென்ப ஓடிய**
**கூடிய என்றாங் கஃது.**

கடந்து போய்விட்ட காலம்மிக நீண்டதாக இருப்பதால், இறந்தகாலம் உயர்ந்த காலம் போல் தோன்றுகிறது.

## பெரம்பலூர் எம்ஆர்எப் வாயிற்கூட்டம்

# இது குஜராத்தா? தமிழ்நாடா?




பெரம்பலூரில் உள்ள எம்ஆர்எப் தொழிற்சாலை முன்பு, ஏஐடியுசி உடன் இணைக்கப்பட்ட எம்ஆர்எப் தொழிலாளர் சங்கத்தின் வாயிற் கூட்டமும், கொடியேற்று விழாவும் 22.8.2023 அன்று நடத்தப்பட இருந்தன.

கொடிமரம் ஊன்ற இடம் பார்த்தபோதே ஹைவே பாட்ரோல் காவல்துறையினர் வந்து, இங்கு கொடி ஊன்றக் கூடாது என்று தடுத்தார்கள். நெடுஞ்சாலைத்துறை, வருவாய் துறை, காவல்துறை அதிகாரிகளிடம் எல்லாம் அனுமதி பெற்றாக வேண்டும் என்று அச்சுறுத்தினர்.

காவல்துறைக்கு 10 நாட்களுக்கு முன்பே அனுமதி கோரி விண்ணப்பம் வந்தாகிவிட்டது. ஆனால் அனுமதி மட்டும் தரவில்லை. சங்கத்தின் தலைவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டு குழு உறுப்பினருமான தோழர் ஞானசேகரனோடு சங்க நிர்வாகிகள் சென்று, மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து நேரடியாக முறையிட்டனர். கொடியேற்ற கொடி மரம் நடுவதற்கு உரிய இடத்தில் அனுமதி பெறுங்கள். மற்றபடி வாயிற் கூட்டத்தை சாமியானா பந்தல், ஒலிபெருக்கி வைத்து நடத்திக் கொள்ளுங்கள் என்று மாவட்ட கண்காணிப்பாளர் கூறி வழி அனுப்பி வைத்தார்.

ஆனால் ஆலத்தூர் வட்டாட்சியர் சங்கத்தினரை அழைத்து, அந்தப் பகுதியில் இந்திய சட்ட தண்டனைச் சட்டத்தின் கீழ் 107வது பிரிவு உத்தரவு அமுல் நடத்தப்பட்டு இருப்பதாகவும், கொடியேற்றவோ கூட்டம் போடவோ கூடாது என்றும், 22 ஆம் தேதி மாலை தன் முன்னே அமைதி கூட்டத்திற்கு வர வேண்டும் என்றும் வாய்மொழியாக 'ஆணை'யிட்டார்.

107 ஆவது பிரிவு என்பது தவறான அல்லது சட்ட விரோதமான செயலை செய்வது, அதற்கு ஊக்கமளிப்பது, அதற்குத் துணை நின்று ஆதரிப்பது ஆகிய குற்றங்களைத் தடுப்பது ஆகும்.

தொழிற்சங்க சட்டப்படி தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறை பதிவு செய்து தந்த தொழிற்சங்கம், அது இயங்கும் தொழிற்சாலை முன்பு கூட்டம் நடத்துவது என்ன தவறான செயல் அல்லது சட்ட விரோத நடவடிக்கை என்று எதைக் கொண்டு அந்த வட்டாட்சியர் முடிவுக்கு வந்தார் என்று தெரியவில்லை.

அச்சுறுத்தல்களுக்கெல்லாம் அடிபணியாது, தொழிலாளர்கள் ஆலை வாயிலில் திரண்டனர். நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடத்தில் தொழிற்சாலை நிர்வாகம் பெரிய பெரிய இரும்பு கர்டர் தூண்களைக் கொண்டு வந்து போட்டிருந்தது. அது மட்டும் இல்லாமல் தொழிற்சாலைக்கு வெளியே நெடுஞ்சாலையில் அவர்களே தடுப்பரண்கள் அமைத்திருந்தார்கள். ஓரமாய் கொடிமரம் ஊன்றுவதற்கு நெடுஞ் சாலைத் துறையின் அனுமதி வேண்டும் என்று கொக்கரித்த ஹைவே பாட்ரோல் காவல்துறை யினர் இந்த அநியாயத்தை ஓரமாக நின்று வேடிக்கை பார்த்தனர்.

காவல்துறை புடை சூழ. வாயிற் கூட்டம் ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது. ஏ ஐ டி யு சி தேசிய குழு உறுப்பினர் நடராஜா, திருச்சி மாவட்ட பொதுச் செயலாளர் கே சுரேஷ், அரியலூர் மாவட்ட பொதுச் செயலாளர் டி தண்டபாணி, பெரம்பலூர் மாவட்ட பொதுச்செயலாளர் ராஜேந்திரன், தலைவர் ஜெயராமன், போக்குவரத்து கழக திருச்சி மண்டல பொதுச் செயலாளர் கே சுப்பிரமணியன், பிஎச்இஎல் ஏஐடியுசி சங்கத்தின் துணை பொதுச் செயலாளர் உள்ளிட்டோர் பேசினார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ஜெயராமன் வாழ்த்துரை வழங்கினார்.

நிறைவாக ஏஐடியுசி தேசிய செயலாளர் டி எம் மூர்த்தி விளக்க உரையாற்றினார்.

"இவ்வளவு ஆள், அம்பு, சேனையோடு ஒரு சாதாரண வாயில் கூட்டத்தை தடுப்பதற்கு மாநில அரசின் நெடுஞ்சாலை, வருவாய், காவல்துறை அனைத்தும் சேர்ந்து இவ்வளவு முனைப்பு காட்டுவதன் அவசியம் என்ன?

நாங்குநேரியில் நன்றாக படித்தார் என்று ஆசிரியரிடம் பாராட்டு வாங்கிய ஒரே குற்றத்திற்காக, வீட்டுக்குள்ளே வைத்து வெட்டப்பட்டு ரத்தம் சொட்ட சொட்ட மாணவன் சின்னதுரையும் அவரது தங்கையும் காத்துக் கிடந்த போது, ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் தாமதமாகச் சென்ற காவல்துறை, எம்ஆர்எப் தொழிற்சாலை முன்பு கொடிமரம் நடுவதற்கு குழி தோண்டுவதற்கு முன்பே ஓடோடி வருவது ஏன்? நாம் தமிழ்நாட்டில் தான் இருக்கிறோமா அல்லது குஜராத்தில் இருக்கிறோமா என்று சந்தேகம் வருகிறது.

இங்கு சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும் என்று சொல்கிறீர்களே? இங்கே நாங்கள் யாரை எதிர்த்து வசைபாடி, தரக்குறைவாக பேசிக் கொண்டிருக்கிறோம். நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் வட்டாட்சியர் என்ன அமைதி பேச்சு வார்த்தை நடத்துவது?

இங்கு என்ன சாதி, மத கலவரமா நடந்து கொண்டிருக்கிறது. இங்கிருக்கும் எங்களுக்கு ஒவ்வொருவரும் என்ன சாதி என்று தெரியாது. சங்கத்தின் மூன்று முக்கிய நிர்வாகிகளில் ஒருவர் இந்து, ஒருவர் இஸ்லாமியர், ஒருவர் கிறிஸ்தவர். யாரை அழைத்து எங்களுக்கு எதிராக அமர வைத்து அமைதிப் பேச்சு வார்த்தை நடத்த போகிறீர்கள்?

நூறாண்டு காலத்திற்கும் மேலாகப் போராடி தியாகிகளின் ரத்தத்தால் நனைந்த இந்தச் செங்கொடியை இன்றைக்கு ஏற்ற விடாமல் நீங்கள் தடுத்திருக்கலாம். ஆனால் அத்தனை அச்சுறுத்தல்களையும் மீறி இங்கே திரண்டு இருக்கிற இந்த இளைஞர்களின் நெஞ்சில் ஏற்றப்பட்ட கொடியை காவல்துறை அல்ல, இந்திய இராணுவமே வந்தாலும் பறித்து எடுத்து விட முடியாது.

திராவிட மாடல் அரசு என்பது அனைவரும் சமநீதியை, சமூக நீதியை உறுதிப்படுத்துவது. பணம் கொழுத்தவன் பின்னால் நின்று வால் பிடிப்பது அல்ல. அரசின் கொள்கைகளுக்கு மாறாக அரசுத் துறைகளே நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது" என்று அவர் பேசினார்

அதன் பின்பு பெரம்பலூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக கூட்ட அரங்கில், தொழிற்சங்கப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. அடுத்த கட்ட இயக்கங்களை தீர்மானித்தது.

எதிர்பார்த்ததை போலவே ஆலத்தூர் வட்டாட்சியரிடம் நண்பகல் தாண்டி, எத்தனை மணிக்கு அமைதி கூட்டத்திற்கு வர வேண்டும் என்று கேட்ட போது நிர்வாகம் வர மறுத்துவிட்டது என்று பதில் சொன்னார். படித்தவன் சூதும் வாதும் செய்தால் ஐயோன்னு போவான் என்றான் பாரதி. படித்ததோடு அதிகாரத்திலும் இருக்கிற வட்டாட்சியரிடம் மக்களின் வரிப்பணத்தில் இருந்து தான் அவர் ஊதியம் வாங்கிக் கொண்டு இருக்கிறார் என்பதை மட்டும் நினைவுபடுத்த வேண்டி இருக்கிறது.

# ஊட்டச்சத்து இன்றி உருக்குலையும் குஜராத்!



க.இப்ராகிம்

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதியின் வரி உணவினுடைய இன்றியமையாத தேவையை மிக சுருக்கமாக விளக்கி உள்ளது. இந்தியா உலகின் மிக முக்கிய பொருளாதார வர்த்தகத்தை உள்ளடக்கிய நாடு, வியக்க வைக்கும் ராணுவ பலத்தை கொண்ட நாடு என்று பேசிக் கொண்டிருக்கும் அதே வேலையில் தான் இந்தியாவில் 17 லட்சம் மக்கள் ஒருவேளை உணவுக்கு சிரமப்பட்டு வருகின்றனர் என்று ஆய்வறிக்கைகள் கூறுகிறது.

அதே நேரம் இந்தியாவில் வறுமைக் கோட்டினுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர்கள் மாறு தட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கூறும் வறுமை கோடு என்பது ஒரு வேளை உணவில்லாமல் இறக்கும் மக்களினுடைய எண்ணிக்கையை பொறுத்து இருக்கிறது. இன்று திடீர் மரணங்களும், நோய்களினுடைய தாக்கமும் அதிகரித்து இருப்பதற்கு முக்கிய காரணம் ஊட்டச்சத்து குறைபாடு.

விலை கொடுத்து உடலுக்கு தேவையான அடிப்படை உணவை கூட வாங்கி சாப்பிட முடியாத மக்கள்தான் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் ஊட்டச்சத்தை மூன்று வகையாக பிரிக்கின்றனர். அடிப்படை உணவு, ஊட்டச்சத்து உணவு, ஆரோக்கிய உணவு என்று. அடிப்படை உணவு என்பது உடலுக்கு தேவையான அடிப்படை ஆதாரங்களை உடலுக்கு அளிக்கக்கூடிய உணவாகும். இந்த அடிப்படை உணவை கூட பெற முடியாமல் வறுமையில் வாடும் மக்களினுடைய எண்ணிக்கை 17 லட்சம் என்று கூறுகின்றனர். மேலும் ஊட்டச்சத்து உணவு என்பது ஒரு நாளைக்கு உடலுக்கு தேவையான 2339 கலோரி உற்பத்தி செய்வதற்கான உணவு முறை. ஆரோக்கிய உணவை என்றால் தெற்காசியாவிலேயே 40 சதவீத மக்களுக்கு மட்டுமே இவ்வகை உணவு கிடைக்கிறது என்று ஒரு ஆய்வு அறிக்கை கூறுகிறது. உலகளாவிய மருத்துவ ஆணையத்தின் பரிந்துரையின் படி ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்கு 2339 கலோரி உணவு கிடைக்க வேண்டும். இவ்வாறு 30 கிராம் பருப்பு, 30 கிராம் அரிசி, 50 கிராம் இறைச்சி, 100 கிராம் பால், 100 கிராம் காய்கறி, 100 கிராம் பழம், 100 கிராம் எண்ணெய், 3 லிட்டர் சுகாதாரமான தண்ணீர் ஆகியவை மனித உடலுக்கு தேவையான ஆரோக்கியத்தினுடைய அடிப்படை என்று கூறியுள்ளது.

நாட்டில் மிகக் குறைந்த தனிநபர் வருமானத்தை கொண்ட மாநிலமாக குறிப்பிடப்படும் உத்திரபிரதேசம், பீகார், மகாராஷ்டிரத்தை விட குஜராத் ஊட்டச்சத்து குறைபாட்டால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக குஜராத்தில் கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்கள் தொகையில் 44.45 சதவீதம் மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர், நகர்ப்புற பகுதியைச் சேர்ந்த 28.47 மக்களும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். இது மட்டுமல்லாது தேசிய குடும்ப நல சுகாதார ஆய்வின் படி வளர்ச்சி குன்றிய குழந்தைகள் கொண்ட மாநிலத்தில் குஜராத் 4வது இடத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த மாநிலத்தில் 39 சதவீத குழந்தைகள் வயதுக்குரிய எடை இல்லாமல் காணப்படுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி குஜராத்திற்கு அதை செய்தேன் இதை செய்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அங்கே எதை செய்து இருக்கிறார் என்பதை தற்போது வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் அப்பட்டமாக வெளியிட்டுவிட்டன. ஊட்டச்சத்து குறைபாடு என்பது ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கான சாராம்சம்.

இந்திய தேசிய ஃபுட் செக்யூரிட்டி 2013 சட்டத்தின்படி அரிசி, கோதுமை போன்றவை அடிப்படை உணவுகளாக வரையறுக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் பெருவாரியான மாநிலங்களில் குறைந்த அளவிலே மட்டுமே அதை விநியோகிக்கப்படுகின்றன. இதில் தமிழ்நாடு சற்று முன்னேறி அரிசி கோதுமையோடு சேர்த்து பருப்பு, எண்ணெய் போன்றவற்றையும் மானிய விலையில் மக்களுக்கு கிடைக்க வழி செய்து இருக்கிறது.




ஆனால் அதே நேரத்தில் பாஜகவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தமிழ்நாடு ஊட்டச்சத்து பெட்டக டெண்டரி ஊழல், ஊட்டச்சத்து குறைபாடு அதிகரிக்கிறது என்று தவறான தகவல்களை தெரிவித்து வருகிறார்.


ஊட்டச்சத்து குறைபாடு தமிழ்நாட்டில் குறைந்து வருகிறது. தமிழ்நாடு பள்ளிகளில் மதிய உணவு மட்டுமல்லாமல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலை உணவும் வழங்கப்படுகிறது. மேலும் ஊட்டச்சத்தை கொண்டு செல்ல பல்வேறு அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அடிப்படை உணவுகள் குறைந்த அளவிலாவது மக்களுக்கு கிடைத்த வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. இப்படி பல்வேறு வகையான முன்னெடுப்புகளின் காரணமே தமிழ்நாடு ஊட்டச்சத்து குறைபாடு குறைந்து இருக்கிறது. அதே சமயம் முழுமையாக ஒழிக்க வேண்டும். பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்தியும், ஜிஎஸ்டி வரியை விரிவுபடுத்திக் கொண்டும், வரி மேல் வரிவிதித்து மக்களை சுரண்டும் இந்த பாஜக அரசின் உதவியுடன் மக்களையும், நாட்டினுடைய வளங்களையும் சுரண்டும் கார்ப்பரேட் முதலாளிகளையும், அவர்களின் அடிவருடியாக செயல்படும் இந்த வலதுசாரி பிற்போக்குவாத ஒன்றிய அரசையும் வெளியேற்றினால் மட்டுமே சாமானிய மக்களுக்கான ஊட்டச்சத்து என்பது உறுதி செய்யப்படும்.

இது மட்டுமல்லாது தற்போது பருவநிலை மாற்றத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்பு காரணமாக அனைத்து வகையான உணவுப் பொருட்களின் விளைச்சலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக விலைவாசி உயர்ந்து, ஊட்டச்சத்து குறைபாடு மேலும் தீவிரமடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றை தடுக்க விவசாயிகளுடைய தேவைகளையும் கோரிக்கைகளையும் கேட்க கூடிய அரசு அமைய வேண்டும்.




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.


JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 26.08.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




# நன்றி! நன்றி! நன்றி!

இந்திய விடுதலைப்போரில் கொங்கு மண்டல தியாகி
தீரன் சின்னமலை பெயரில் மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொங்கு வேளாளர் அறக்கட்டளை, திருப்பூர்–3








## தீரன் சின்னமலை மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருப்பூரில் தொடங்க

தாயினும் சாலப்பரிந்து அரசு ஆணை தந்து உதவிய

மாண்புமிகு முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும்,

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் **கே.பொன்முடி** அவர்களுக்கும்,

மாண்புமிகு வீட்டுவசதி, நகரமைப்புதிட்டமிடல் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் **சு.முத்துசாமி** அவர்களுக்கும்,

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் **மு.பெ.சாமிநாதன்** அவர்களுக்கும்,

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் **கயல்விழிசெல்வராஜ்** அவர்களுக்கும்,

அதற்கு உறுதுணையாக உடனிருந்த தோழர் **கே.சுப்பராயன் M.P.** அவர்களுக்கும்,

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் **க.செல்வராஜ் M.L.A.** அவர்களுக்கும்,

வணக்கத்திற்குரிய மேயர் **ந.தினேஷ்குமார்** அவர்களுக்கும்,

வணக்கத்திற்குரிய துணைமேயர் **ஆர்.பாலசுப்பிரமணியம்** அவர்களுக்கும்,

எங்களின் வழிகாட்டியாக உள்ள அறக்கட்டளை தலைவர் திரு. **பெஸ்ட். S.ராமசாமி** அவர்களுக்கும்

**நெஞ்சார்ந்த நன்றியினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

### கல்லூரியின் சிறப்பம்சங்கள்

- நன்கொடை இல்லா சேர்க்கை
- அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து வசதி
- அனுபவமிக்க பேராசிரியர்கள்
- ஸ்மார்ட் வகுப்பறைகள்
- முற்றிலும் இயற்கையான சூழல்
- 100% வேலைவாய்ப்பு
- கலை, இலக்கியம், விளையாட்டு ஊக்குவிப்பு

இன்று முதல் அட்மிஷன் நடைபெறுகிறது

### பாடப்பிரிவுகள்

- B.Com
- B.Com (CA)
- B.B.A
- B.Sc (CDF)
- B.Sc CS (AI)

முதலில் வருபவர்களுக்கு முதல் செமஸ்டர் கட்டணத்தில் சிறப்புச்சலுகை

## தீரன் சின்னமலை மகளிர் கலை, அறிவியல் கல்லூரி

அவிநாசி to மங்கலம் NH ரோடு, வஞ்சிபாளையம், திருப்பூர்-641663.

**Mob. 98422-86004 / 94437-38844**



பெஸ்ட் S.ராமசாமி
தலைவர் – தாளாளர்



கீதாஞ்சலி S.கோவிந்தப்பன்
செயலாளர்



ஒகே M.கந்தசாமி
பொருளாளர்



PVS P.முருகசாமி
துணைத்தலைவர்



டிக்சன் R.குப்புசாமி
துணைத்தலைவர்



NDM N.துரைசாமி
இணைச்செயலாளர்



Dr. ரேச்சல் நான்சி பிலிப்
M.Com., M.Phil., B.Ed., Ph.D
கல்லூரி முதல்வர்